மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: பதின்நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 17 திங்கட்கிழமை (30.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 12

# மக்களை வெளியேறப் புலிகள் அனுமதிப்பின் இடைக்காலப் போர் நிறுத்தத்துக்குத் தயார்

## இலங்கைக்கான ஐ.நா. தூதுவர் பாலிகக்காரா அறிவிப்பு



நியூயோர்க், மார்ச் 30

முல்லைத்தீவில் சிக்குண்டுள்ள பொதுமக்கள் வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதித்தால் -

இடைக்கால - தற்காலிக - போர் நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கு -

இலங்கை அரசாங்கம் சம்மதிக்கக்கூடும். அதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்வதற்கு அரசு தயாராகவே உள்ளது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி எச்.எம்.ஜி.எஸ்.பாலிக்காரா

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 30

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று நடைபெறமாட்டாது என யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சேவை எப்போது மீண்டும் ஆரம்பமாகும் என்ற தகவல் கிடைக்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கப்பல் சேவை இன்று இடம்பெறும் என யாழ். செயலகம் முன்னர் அறிவித்திருந்தது. (1)

## நிபந்தனைகளின் அடிப்படையிலேயே புலிகளுடனான போர் இடைநிறுத்தம் பரிசீலிக்கப்படும் - கெஹலிய



கொழும்பு, மார்ச் 30

போர் இடைநிறுத்தம் ஒன்றை கடைப்பிடிக்க இலங்கை அரசாங்கம் தயாராக இருக்கிறது. அதேவேளை, இலங்கை அரசினால் முன்வைக்கப்படும் சில மாதிரிகளை சர்வதேச சமூகம் உறுதியாகக் கடைப்பிடிக்க முன்வரும் பட்சத்தில் சர்வதேச செயலணியை அனுமதிக்க முடியும்.

பாதுகாப்பு பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இவ்வாறு தெரிவித்ததாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இருபது சதுர கிலோ மீற்றர் பரப்பளவுக்குள் புலிகள் மனிதக் கேடயமாக வைத்திருக்கும் சிவிலியன்களைப் (14 ஆம் பக்கம் பார்க்க)

## வில்பத்துக்காட்டில் பெரும் தேடுதல்

கொழும்பு, மார்ச் 30

வில்பத்துக் காட்டுப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நேற்று தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர் எனத் தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது. வில்பத்துக் காட்டுப் பகுதிக்கு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சை முடிவு 8 ஆம் திகதி வெளியாகும்

கொழும்பு, மார்ச் 30

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற ஜி.சீ.ஈ(சாதாரண)தரப் பரீட்சை முடிவுகள் முதலாம் தவணை விடுமுறை தினமான அடுத்தமாதம் 8 ஆம் திகதி வெளிவரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு தோற்றிய 5 லட்சத்து 40 ஆயிரம் பேரின் பரீட்சை முடிவு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும்

### ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 30

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்று கேட்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இதன் மூலம் மோதல் பகுதியில் அகப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வலயங்களில் பணயக்கைதிகளாக புலிகளால் வைக்கப்பட்டிருக்கும் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்காக ஜனாதிபதி இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார் என ஜனாதிபதி செயலகம் நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுப்பி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இறுதி விநியோகப் பாதையும் இப்போது தம்வசம் என்கிறது படைத்தரப்பு

கொழும்பு, மார்ச் 30

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பிற்கு கிழக்கே விநியோக நடவடிக்கையில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளுக்கும் படைத்தரப்புக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சண்டை இடம்பெற்றுள்ளது எனப் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன. இந்த மோதலின் போது விடுதலைப் புலிகளின் இறுதி விநியோகப் பாதையும் படையினரால் கைப்பற்றப்பட்டதாக இராணுவம் அறிவித்தது.

புதுக்குடியிருப்பில் இருந்து இரணைப்பாலைப் பகுதியை நோக்கி விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் அணி மீது 58 ஆவது படைப் பிரிவும் 8ஆவது விசேட படைப்பிரிவும் இணைந்து தாக்குதலை நடத்தின. அதில் விடுதலைப் புலிகளில்9 பேர் உயிரிழந்

(14 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 6 பக்கங்கள் கொண்ட இலவச கல்விச் சுடர் இணைப்பிதழ் நாளை

## இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு இல்லாமற் போனதற்கு இந்திய அரசின் தவறான கொள்கையே காரணம்

### ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி கண்டனம்

பெங்களூர், மார்ச்30

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் இந்திய அரசு எப்போதுமே உரிய நேரத்தில் சரியான கொள்கைகளை வகுத்ததில்லை. அதனால்தான் தமிழ் மக்கள் அங்கு அவதிப்படுகிறார்கள். இந்திய மத்திய அரசு பெரும் தவறு செய்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வாழும் கலை அமைப்பின் தலைவரும் ஆன்மீகக் குருவுமான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி.

ஐரோப்பா, கனடா உட்பட பல்வேறு மேலை நாடுகளுக்கு அண்மையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நாடு திரும்பிய பின்னர் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணாமற்போனதற்கு இந்திய அரசின் குறுகிய மனப்பான்மையும், முதுகெலும்பில்லாத கொள்கைகளுமே காரணம். எனவே இலங்கைத் தமிழர்கள் தன்மானத்துடனும் சமாதானத்துடனும் வாழ வேண்டும் என்றால் தற்போது இந்தியாவில் உள்ள மத்திய அரசு மாற வேண்டும்.



ஐரோப்பாவிலும் கனடாவிலும் வாழும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது தாக்குதல் 16 சிறுவர்கள் உட்பட 49 பேர் உயிரிழந்தனர்

கொழும்பு, மார்ச் 30

வன்னியில் - முல்லைத்தீவில் - நேற்றும் தொடர்ந்த அகோர ஷெல் தாக்குதல்களில் 16 சிறுவர்கள் உட்பட 49 பேர் உயிரிழந்தனர். 27 சிறுவர்கள் உட்பட 125 பேர் காயமடைந்தனர் என இணையத் தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தாக்குதல்கள் உயிர்ச்சேதங்கள் குறித்து இணையத்தளங்களில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

வன்னியில் மக்கள் வாழ்விடங்களை நோக்கி படையினர் நேற்று நடத்திய அகோர ஷெல் தாக்குதல்களில் 16 சிறுவர்கள்

(14 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்வராசா சரஸ்வதி
திதி: சதுர்த்தி (30.03.2009)
மண்ணுலகில் விண்ணுலகில்
19.11.1946 02.04.2006

எங்கள் குடும்ப குல விளக்கே
அன்பின் இருப்பிடமே
கண்ணை இமை காப்பது போல
எங்களை காத்தவரே. ஆயிரம் உறவுகள்
இருந்தென்ன உங்கள் அன்பிற்கும்
அரவணைப்பிற்கும் ஈடாகுமா
மூன்றாண்டென்ன மூவாயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

108/9, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர்.
என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர் ஏ.ஜே.குலசிங்கம்
(மொழி பெயர்ப்பாளர், கரித்தாஸ் - கியூடெக், யாழ்ப்பாணம்)

எமது நிறுவனத்தின் சமூகப் பணிகளின் முன்னெடுப்புக்களில் மிகவும் காத்திரமான மொழிபெயர்ப்புப் பணியை ஆற்றி எம்முடன் உழைத்தது மட்டுமல்லாது அன்பான, எழிமையான குணத்தால் எல்லோரின் மனதிலும் இடம் பிடித்த உத்தமர். அவரது இழப்பு எமது நிறுவனத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

அவர்களின் மறைவினால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர், ஊழியர்கள்,
கரித்தாஸ் - கியூடெக், யாழ்ப்பாணம்.

குறிப்பு: இன்று (30.03.2009) திங்கட்கிழமை மு.ப. 10.15 மணியளவில் அன்னாரது இறுதி ஊர்வலம் அவரது இல்லத்தில் இருந்து ஆரம்பமாகும்.

## மரண அறிவித்தல்

### கந்தையா சிங்கராசா

(ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஊழியரும், சாரதியும், நாடகக் கலைஞரும்)

அரியாலை, கனகரத்தினம் வீதியைப் பிறப்பிடமாகவும் அல்வாய் தெற்கு, அமிர்தமனையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிங்கராசா நேற்று (29.03.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சொர்ணம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற கனகசிங்கம் - தங்கப்பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் அமிர்தகுமாரியின் பாசமிகு கணவரும் திருமதி சச்சிதானந்தம் தங்கரத்தினம், காலஞ்சென்ற ஜெகராசா மற்றும் திருமதி அன்னலிங்கம் ஜெயராணி (ஜேர்மனி), காலஞ்சென்ற நடராசா கேசவராணி ஆகியோரின் பாசமிகு சகோதர ரும் பாக்கியசிங்கம் (பிரதேசசபை, உடுப்பிட்டி), சச்சிதானந்தம், திருமதி கமலத்தாம்பாள், அன்னலிங்கம் (ஜேர்மனி), நடராசா ஆகியோரின் மைத்துனரும் ஜெயமோகனா (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), இமனுவல் ஆனந், தேவானந், முகுந்தன் (ஜேர்மனி), குகேந்தினி (ஜேர்மனி), நிதர்சன் (ஜேர்மனி), கீர்த்தனன் ஆகியோரின் அன்பு மாமனும் ஹேமலதா (கனடா), மகிந்தன் (கனடா), ஜெருட்சன் (பெல்ஜியம்) ஆகியோரின் பெரியப்பாவும் திருமதி பாக்கியசிங்கம் குமுதினியின் (சமுர்த்தி உத்தியோகத்தர்) சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.03.2009) ஞாயிறு பி.ப. 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அல்வாய் பங்குவேம்படி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை பவன்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் பரிஸ் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பவன் (23.03.2009) திங்கட்கிழமை பரிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் அன்னரத்தினம் தம்பதியினரின் மூத்தமகனும் காலஞ்சென்ற சிவசிதம்பரம் மற்றும் மலர்வதனம் தம்பதியரின் அன்பு மருமகனும் மாதினியின் (பரிஸ்) அன்புக் கணவரும் பிரபா (கனடா), கீதா, உமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவகுமார் (கனடா), பாலகிருஸ்ணன் (கனடா), சிவநந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் வேணுகாசினி, கோபிசன் ஆகியோரின் பெரிய தந்தையும் சாந்தினி, சுகபிரமம் (கனடா), மாதவன், குகன், சுவர்ணா, சிவனி, வித்தகன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2009) திங்கட்கிழமை பரிஸில் (பிரான்ஸ் நேரப்படி) பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு, இணுவில்.
தொ.பே: 0214590486

தகவல்:
குடும்பத்தினர்.

## நவக்கிரியில் இன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 30

நவக்கிரி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய பெருந்திருவிழாவில் தேர்த்திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

காலையில் இருந்து விசேட அபிஷேக, பூசை, வசந்த மண்டபப்பூசை இடம் பெற்று 10 மணிக்கு விநாயகர் தேரில் ஆரோகணிப்பார்.

(சிறப்பிதழ் 09 ஆம் பக்கத்தில்)

## தந்தை செல்வா நினைவு அஞ்சலி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

தந்தை செல்வாவின் 111 ஆவது நினைவு தினமான நாளை மு.ப. 9.30 மணிக்கு நகரில் உள்ள அவரது நினைவாலயத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுவின் தலைவர் முன்னாள் போராயர் கலாநிதி எஸ்.ஜெயநேசன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும். (1)


## தேவை

ஊர்ச்சேவல் எந்தநாளும் 1Kg 450/= வுக்கு கொள்வனவு செய்யப்படும்.
தாசன் பாம்,
158/4, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

அரச அலுவலரின் தனிப்பாவனையில் உள்ள Np Ho xxxx இலக்கமுடைய நீல நிற Lancer 50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் 4.30 - 7.30
தொடர்பு: 077-4002263, 077-1754667

## பதவி வெற்றிடம்

கணனி போதனாசிரியர் (சாவகச்சேரிக் கிளை)

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகவல் தொழில்நுட்பத்தில் Higher National Diploma அல்லது சமமான தகைமையுள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.

தகைமையுடையோர் தமது சுயவிபரக் கோவையுடன் 01.04.2009 அன்று 12.00 மணிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு சமூகம் தரவும்.

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES (IBMS)
சங்கத்தானை, சாவகச்சேரி.

## விற்பனைக்கு வந்துள்ளன

தென் இந்தியாவில் இருந்து பல்துறை சார்ந்த ஏராளமான புத்தகங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. எமது பிரத்தியேக களஞ்சியத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகள், நூலகங்கள், பிரதேச சபைகள், நகரசபைகள் மற்றும் மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு அதி விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

அன்னை புத்தக நிலையம்,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.


## வீதிப்போக்குவரத்து கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 30

கொக்குவில் லயன்ஸ் கழகத்துடன் இணைந்து யாழ்.மணிபல்லவ கழகமும், கோண்டாவில் லயன்ஸ் கழகமும் ஏற்பாடு செய்துள்ள வீதிப் போக்குவரத்து தொடர்பான கருத்தரங்கு இன்று காலை 7.30 மணிக்கு கோண்டாவில் கிழக்கு ராமகிருஷ்ணா மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதே அமைப்புக்களின் ஏற்பாட்டில் கண்பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும் நாளை பி.ப. 3 மணிக்கு அதே இடத்தில் இடம் பெறவுள்ளன. என்று கோண்டாவில் லயன்ஸ் கழகச் செயலாளர் [illegible] தெரிவித்தார். (1)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சண்முகநாதன் விசாலாட்சி

(கனகம்மா)



சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகநாதன் விசாலாட்சி நேற்று (29.03.2009) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற சண்முகநாதனின் மனைவியும் யோகநாதன், தெட்சணாமூர்த்தி, கலைநாதன் (பிரான்ஸ்), ஸ்ரீதர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் லங்காதேவி (ராணி), விஜயலட்சுமி, சுகுணா (பிரான்ஸ்), சுயாமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் கவிதா - செந்தூரன் (கனடா), ஆனந்த் - சுகந்தினி, சுலக்ஷன், ராம்கி, நிக்ஷன், விதுஷா, ஜெனிபா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லக்சிகனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2009) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோனகர் தெரு,
168, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.
தகவல்: ச.யோகநாதன்,
ச.தெட்சணாமூர்த்தி (மகன்).

### அம்புறோஸ் ஜேக்கப் மரியதாஸ் குலசிங்கம்

(மொழி பெயர்ப்பாளர், கியூடெக் - கரித்தாஸ், முன்னாள் பொருளாளர், செஞ்சிலுவைச் சங்கம், நல்லூர்)



தெல்லிப்பழை, வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் யூதாதேயு வீதி, அரியாலையை நிரந்தர வசிப்பிடமாகவும் 390/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாஸ் குலசிங்கம் (28.03.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்புறோஸ் தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர் தம்பதியரின் மருமகனும் ரூபி குலசிங்கம் அவர்களின் அன்புக் கணவரும் குலேந்திர ராஜா (கனடா), வதனி (கனடா), காலஞ்சென்ற ராஜி ஆகியோரின் தந்தையும் ரெஜி பிரான்சிஸ் (கனடா), நிலான் (கனடா) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற கெலன் மரியரெட்ணம், காலஞ்சென்ற ஜோண்தாசன் (முன்னாள் வழக்கறிஞர், மன்னார்) மற்றும் அல்பேட் செபஸ்ரியன்நாதன் அம்பு றோஸ் (கொழும்பு; ஓய்வுபெற்ற ஆசிரியர், சென் ஜோசப் வித்தியாலயம்- கொழும்புத்துறை), அமிர்தம் கருணராஜா (நோர்வே) ஆகியோரின் சகோதரரும் ரெபெக்கா, ரொனால்ட், நிரோசன், நிரோமி, நிரூசன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின்பூதவுடல் இன்று (30.03.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

390/1, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 060 221 1117

தகவல்:
ரூபி குலசிங்கம்
(மனைவி).

### திருமதி சிவபாதராசா சிவபாக்கியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்)



மன்னாரைப் பிறப்பிடமாகவும் அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சி.சிவபாக்கியம் நேற்று (29.03.2009) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் சிவபாதராசா (ஓய்வுபெற்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர், யாழ்.மாநகராட்சி மன்றம்) அவர்களின் பாசமிகு மனைவியும் குமுதினியின் (பொறியியலாளர், கனடா) பாசமிகு தாயாரும் ரகுவின் (பொறியியலாளர், கனடா) பாசமிகு மாமியாரும் கிஷானா, சக்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சின்னையா (ஓய்வுபெற்ற மருந்தாளர்) - சின்னம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும் சிவஞானம் (ஓய்வுபெற்ற கிராம சேவை அதிகாரி, திருக்கேதீஸ்வரம்), அம்பிகாவதி (நுணாவில்), கமலாம்பிகை (மன்னார்), ஞானாம்பிகை (கொழும்பு), நீலாம்பிகை (ஆசிரியை, கொழும்பு கொட்டாஞ்சேனை தமிழ் மகாவித்தியாலயம்), சிவபாதம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி சிவஞானம் சிவக்கொழுந்து (ஓய்வுபெற்ற ஆசிரியை, சாவகச்சேரி றிபேக் கல்லூரி), கதிரவேலு (நுணாவில்), கனகசூரியர் (மன்னார்), துரைராசா (அமரர்), சர்வேஸ்வரன் (கொழும்பு), செல்வராசா, சற்குணராசா, தருமராசா, தியாகராசா, தவராசா, ஆனந்தராசா, துரைராசா, தேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் குமார், பவன், பவானி, நிவேதிகா, நிவேதிகன், நிஷாஜினி ஆகியோரின் பெரிய மாமியும் சுரேஸ் (சுவிஸ்), மிதுளா, சியாமளா, ரமேஸ், சுனித்திரா, சுபத்திரா, சுதர்ஷன், நித்தி, அருண், இந்துஜா ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ராஜபாக்கியம்",
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

தகவல்:
V.S.சிவபாதராசா (கணவர்).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்



உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நீதியுடனான சமாதானம்.... எப்போது?

இலங்கை விவகாரம்- வன்னியில் - முல்லைத் தீவில் மக்கள் அழிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது இப்போது சர்வதேச மயப்பட்டுள்ளது. அதனால் முல்லைத்தீவில் நிகழவுள்ள- எதிர்பார்க்கப்படும்- மனிதப் பேரவலத்தைத் தடுக்க அங்கு போர் நிறுத்தம் தேவை. போரில் ஈடுபட்டுள்ள இரு சாராரும் அதனை நிறுத்தி உயிரழிவுகளைத் தடுக்க வேண்டும்- என்ற குரல் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை தொடக்கம் மற்றும் மாநாடுகள் மட்டம் வரை ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

மனித உரிமைகளில் அக்கறையும் தீவிரமான செயற்பாடுடையவர்களுமான முன்னணிப் பிரமுகர்களும், அமைப்பினர்களும் இலங்கை விவகாரத்தில் அக்கறை தெரிவித்து வருகின்றனர். உலக நாடுகள் பலவும் மனித அழிவை- ஓர் இனத்தின் அழிவை- தடுக்க வேண்டும் என்ற கருத்தை ஒலித்து வருகின் றன.

போரினால் ஏற்பட்டு வரும் மனித அழிவுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்ற பொதுவான கருத்து உலகளாவிய ரீதியில் வலியுறுத்தப்படுகிறது. மேற்குலகின் வலுவுள்ள நாடுகளும் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி வருகின்றன.

ஆனால் அதனைச் செய்விக்க இயலாத தன்மையே அந்த நாடுகளிடம் காணப்படுகின்றது. போரில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்புகளில் ஒன்றான அரசாங்கம் போரை இப்போதைக்கு நிறுத்த முடியாது என்ற தீர்க்கமான- விட்டுக்கொடுக்கத் தயாரில்லாத- நிலையைக் கைக்கொண்டிருக்கின்றது. பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் தனது திட்டத்துக்குப் போர் நிறுத்தம் ஊறு விளைவித்து விடும் என்பதனால் அதனை நினைத்துப் பார்க்கவும் அது விரும்பவில்லை.

இத்தகைய ஒரு சார்ந்தர்ப்பத்தில், இலங்கையின் படுகொலைகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய தார்மீகக் கடப்பாடு சர்வதேசத்திற்கிருப்பதாக அமெரிக்காவைச் சேர்ந்த முன்னாள் சிவில் உரிமைப் போராட்ட வீரரான- மனித உரிமை வாதியான்- வண.ஜெசி ஜக்சன் வலியுறுத்தியுள்ளார்.

லண்டனில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் மாநாட்டில் உரையாற்றிய வண. ஜெசி ஜக்சன் குறிப்பிட்ட முக்கிய அம்சங்களில் சில கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

* இலங்கை நெருக்கடி தொடர்பாக சர்வதேச மட்டத்திலான விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டிய தேவை உண்டு. இப்போதைய நெருக்கடிக்குச் சிந்தித்துச் செயற்படுவதனாலேயே தீர்வுகாண முடியும்; வன்முறைகளால் அல்ல.

* எமது தலைகளுக்கு மேலாகத் துப்பாக்கிச் சன்னங்கள் செல்லும் ஓசையின் மத்தியில் பேசமுடியாது. வன்செயல் நிறுத்தப்பட வேண்டும். பேச்சு வார்த்தை மேசைக்குச் செல்வதற்கு முன்னர் வன்முறைகளுக்கு முடிவு கட்டப்பட வேண்டும்.

* மனிதர்களுக்குத் துன்பம் ஏற்படும் போதும், எங்கும் பீதியான நிலைமை தோன்றுகின்ற போதும், எல்லோருக்குமே அதனைத் தடுக்க வேண்டிய தார்மீகக் கடமை உண்டு.

* அகிம்சை, சகவாழ்வு என்பனவற்றில் தெளிவுகள் உள்ளன. அழிவுக்கப்பால் ஏதோ ஒரு வழியில் நல்லிணக்கத்தைத் தமிழ்ச் சமூகம் நாட வேண்டும். கூடிச் சண்டை பிடிக்காமல் சகவாழ்வு குறித்துச் சிந்திக்க வேண்டும்.

* இலங்கையில் சர்வதேச சட்டத்திற்கு மதிப்பளித்தல், மனித உரிமைகள், சுயநிர்ணயம், பொருளாதார நீதி என்பவற்றை உறுதிப்படுத்த வேண்டிய தேவை உண்டு.

* நோக்கம் சரியானதாக இருந்தால் நீங்கள் நிலைத்திருப்பீர்கள். இதன் பொருள் சகவாழ்வே அன்றி சகப்பகைமை அல்ல.

* இலங்கை அரசும் தமிழ் மக்களும் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். போர் வலிக்கு அப்பால் சமாதானம் சாத்தியமானது. இது குறித்து சம்மந்தப்பட்ட சகல தரப்பினரையும் நம்பிக்கை கொள்ள வைக்க வேண்டும். நீதியுடனான சமாதானம் சாத்தியம் என்பதில் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

அமெரிக்காவின் முன்னணி மனித உரிமை வாதியின் இந்தக் கருத்துக்கள் நிராகரிக்கப்பட முடியாதவை. கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

குறிப்பாக இலங்கை நெருக்கடி தொடர்பாக சர்வதேச மட்டத்திலான விழிப்புணர்வு அதிகரிக்கப்பட வேண்டும் என்ற அவரது ஆலோசனை உள்வாங்கப்பட்டு அதனை செயற்படுத்தப்பட வேண்டிய அவசர கடமை புலம்பெயர் தமிழர்களுக்கு உண்டு.

# இலங்கைக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் நோர்வேயின் செயற்பாடுகளை தடைசெய்ய வேண்டும்

## விமல் வீரவன்ஸ அரசிடம் கோரிக்கை



நோர்வே அரசாங்கம், இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகச் சர்வதேச ரீதியில் பாரிய துரோகத்தை தொடர்ந்தும் இழைத்து வருகிறது. எனவே நோர்வே அரசாங்கத்துடனான ராஜதந்திர உறவுகளை இலங்கை அரசாங்கம் உடனடியாக ரத்துச் செய்வதுடன் இலங்கையில் நோர்வேயின் செயற்பாடுகளை தடைசெய்ய வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஐ.நா.சபையினர் சர்வதேச பொலிஸாரால் தேடப்பட்டு வரும் புலிகளின் சர்வதேச செயற்பாட்டாளரான கே.பி. எனப்படும் குமார் பத்மநாதனுடன் தொலைபேசியில் உரையாடியமை இலங்கைக்கு எதிரான செயற்பாடாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். தேசிய சுதந்திர முன்னணி நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நோர்வே அரசாங்கம் புலிகளின் சர்வதேச செயற்பாட்டாளரான குமார் பத்மநாதனை ஐ.நாவின் விசேட பிரதிநிதியான ஜோன் ஹோம்ஸுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள உதவி செய்துள்ளது. இச் செயலானது இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகச் செய்யப்பட்ட துரோகச் செயலாகும். புலிகளின் சர்வதேச குற்றவாளியான கே.பி.எனப்படும் குமார் பத்மநாதனுடனான தொடர்பையும், அத்தொலைபேசி உரையாடல் தொடர்பாகவும் ஐ.நா. இலங்கை அரசாங்கத்திற்கு விளக்கம் அளிக்க வேண்டும்.

இலங்கை மீதான சர்வதேசத்தின் தவறான கருத்துகளுக்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. தற்போது யுத்தத்தை கொண்டு செல்பவர்கள் புலிகளே. புலி இயத்தினர் உடன்டியாக ஆயுதங்களை கீழே வைத்து இராணுவத்தினரிடம் சரணடைந்து விட்டால் நாளையே இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்துவிடும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பயங் கரவாதிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு பொது மக்களைக் காரணம் காட்டி போர் நிறுத்தத்தை வலியுறுத்துகின்றமை நாட்டின் மூலச் சட்டத்திற்கே எதிரான செயற்பாடாகும். தமிழ்க் கூட்டமைப்பினரின் அரசியல் வாழ்க்கை புலிகளின் தோல்வியோடு முடிவடைந்து விடும். அடுத்த பொதுத் தேர்தலின் பின் நாடாளுமன்றத்திற்குத் தமிழ்க் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பிரவேசிப்பது சந்தேகமே. இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (4)

# பொதுமக்களின் உயிரிழப்புகள் மோசமா அதிகரிப்பு; உடனடியாக யுத்தம் தவிர்க்கப்பட வேண்டும்

## ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு ஹோம்ஸ் அறிவிப்பு



வன்னியில் உருவாகியிருக்கும் மனிதாபிமானப் பிரச்சினை மேலும் மோசமடைந்திருப்பதாகவும், மிகவும் சிறிய பகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களுடைய பாதுகாப்புத்தான் தமது கவனத்துக்குரிய விவகாரமாகியிருக்கின்றது எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான செயலாளர் நாயகமும் அவசர நிவாரணங்களுக்கான இணைப்பாளருமான ஜோன் ஹோல்ம்ஸ் தெரிவித்தார்.

வன்னியில் உருவாகியிருக்கும் மனிதாபிமானப் பிரச்சினை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றிய போதே ஜோன் ஹோல்ம்ஸ் அதனைத் தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் அவர் சுட்டிக் காட்டியுள்ள விடயங்கள் வருமாறு:-

பொதுமக்களுடைய இழப்புக்களைப் பொறுத்த வரையில் அதன் எண்ணிக்கையை எம்மால் சரியான முறையில் குறிப்பிட முடியாவிட்டாலும் கூட அந்த இழப்புக்கள் துன்பகரமான முறையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத விதத்திலும் பெருமளவுக்கு அதிகரித்திருக்கின்றது.

பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நாளாந்தம் பல டசின் கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ள அதேவேளையில், பெருந்தொகையானவர்கள் காயமடைந்திருக்கின்றனர்.

இந்த இழப்புக்களில் பெரும்பாலானவை பாதுகாப்பு வலயப் பகுதியிலேயே இடம்பெற்றிருக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வன்னியின் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக பெப்ரவரி 27 ஆம் நாள் இந்தச் சபையில் நான் விபரித்தேன். ஆனால், அதனைத் தொடர்ந்து இந்த நிலைமைகள் துரதிர்ஷ்டவசமாக மேலும் மோசமடைந்திருக்கின்றன.

தற்போது போர் நடைபெறும் பகுதியில் அரசாங்கப் படைகள் மேலும் முன்னேறியிருக்கின்றன. இதனால் இந்த முன்னணிப் பகுதிகளிலிருந்து அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயம் சில நூறு மீற்றர் தூரத்துக்கு வந்திருக்கின்றது.

### விடுதலைப் புலிகள் மறுப்பு

இருந்த போதிலும் அரசாங்கத்தின் நிபந்தனைகளை ஏற்று ஆயுதங்களைக் கீழே போடுவதற்கோ அல்லது பொதுமக்களை வெளியே செல்வதற்கோ அனுமதிக்கவோ விடுதலைப் புலிகள் மறுத்து விட்டார்கள்.

ஒரு சிறிய பகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள பெருந்தொகையான மக்களுடைய பாதுகாப்புதான் எமது கவனத்துக்குரிய விடயமாக தற்போது உள்ளது. இந்தப் பகுதியில் 150,000 முதல் 190,000 வரையிலான மக்கள் இருப்பதாக எம்மால் அண்மையில் மேற் கொள்ளப்பட்ட ஒரு மதிப்பீடு தெரிவிக்கின்றது.

ஆனால், இந்த எண்ணிக்கை 70,000 க்கும் குறைவானது என்றே அரசாங்கம் சொல்லி வருகின்றது.

பொதுமக்களுக்கு ஏற்பட்டு வரும் உயிரிழப்புக்கள் துன்பகரமானதாகவும் ஏற்றுக்கொள்ள முடியாதளவுக்கும் அதிகமானதாக இருப்பதாக எமக்கு அண்மையில் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஆபத்து அதிகரித்திருக்கிறது

அண்மைக்காலத்தில் பொதுமக்களின் அடர்த்தி அதிகரித்திருப்பதனாலும், கனரக மற்றும் சிறிய ரக ஆயுதங்களின் பாவனை அதிகரித்திருப்பதாலும் அவற்றால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தும் அதிகரித்திருக்கின்றது.

கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்வதாகவும் பாதுகாப்பு வலயம் பற்றிய நிலைப்பாட்டைப் பேணி வருவதாகவும் அரசாங்கம் பல சந்தர்ப்பங்களில் உறுதியளித்திருந்தது.

### பாதுகாப்பு வலயத்தில் புலிகளின் தாக்குதல் நிலைகள்

இருந்த போதிலும் இரண்டு பக்கத்தில் இருந்தும் எறிகணைத் தாக்குதல் இடம்பெறுவதாக செய்திகள் கிடைத்துள்ளன. பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் தமது தாக்குதல் நிலைகளை அமைத்திருப்பதாகத் தெரிகின்றது.

ஆயிரக்கணக்கான சிறுவர்கள் இந்தப் பகுதியில் இருப்பதால் ஊட்டச்சத்தின்மையும், நோய்களும் ஏற்படக்கூடிய ஆபத்தும் உருவாகியிருக்கின்றது. கடல் வழியாக வழங்கப்படும் மனிதாபிமான உதவிகள் வரையறுக்கப்பட்டதாகவே இருக்கின்றது -என்று ஹோம்ஸ் தெரிவித்தார்.

இதேவேளை, உணவு மற்றும் நிவாரண விநியோகம், மக்களின் சுகாதாரப் பிரச்சினைகள், படுகாயமடைந்தவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டுள்ள பணிகள் உட்பட பல விடயங்களையிட்டும் தனது கருத்துக்களையும் அக்கறையையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இந்த மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக தொடர்ந்தும் தமது கவனத்தைச் செலுத்துமாறு உறுப்பு நாடுகளைக் கேட்டுக்கொண்ட ஜோன் ஹோம்ஸ், பிரச்சினைக்கு விரை வாக சமாதான வழிகளில் தீர்வைக் காண்பதற்கு அனைத்துலக சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய நடவடிக்கைகளைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்ட அவர், இரத்தக்களரியை ஏற்படுத்தக் கூடிய இறுதித் தாக்குதல் நடவடிக்கைகளையும் தவிர்த்துக்கொள்ளுமாறும் வலியுறுத்தியிருக்கின்றார். (4)

# திருகோணமலை - மட்டக்களப்பு நேரடி ரயில்சேவை ஜூன் முதல்வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது

## முதலமைச்சரின் செயலாளர் தகவல்

திருகோணமலைக்கும் மட்டக்களப்பிற்கும் இடையிலான நேரடி ரயில் பஸ் சேவை எதிர்வரும் ஜூன் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படும் என கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் எஸ்.மாமாங்கராஜா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போதே இந்தத் தகவலை அவர் வெளியிட்டுள்ளார். கிழக்கு மாகாண சபையின் கடந்தகால வேலைத் திட்டங்கள், எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட செய்தியாளர்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

''கிழக்கு மாகாண சபை செயற்படத் தொடங்கி 10 மாதங்கள் ஆகியுள்ள நிலையில் இந்தியா குறிப்பிடத்தக்க சில உதவிகள் வழங்கியுள்ளது.

இந்தியாவினால் வழங்கப்பட்ட 18 பஸ்களில் 10 பஸ்கள் அரசாங்கத் திணைக்களங்கள், பாடசாலைகள் மற்றும் சிறுவர் இல்லங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. மிகுதி 8 பஸ்களும் தலா 100 பேர் பயணம் செய்யக் கூடிய வகையில் 4 ரயில் பஸ்களாக தற்போது மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன.

ஜூன் மாதம் முதல் வாரத்தில் இந்த 4 ரயில் பஸ்களும் மட்டக்களப்பிற்கும் திருகோணமலைக்கும் இடையில் பகல் நேரம் சேவையில் ஈடுபடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 18 | 31.03.2009 செவ்வாய்க்கிழமை |
| திதி: | பஞ்சமி பி.இ. 03.02வரை |
| நட்சத்திரம்: | ரோகினி பி.இ.01.59 வரை |
| சுபநேரம்: | 10.41- 12.11 |
| ராகுகாலம்: | 03.11 - 04.41 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 08 . 06 . 1993



இறப்பு 28 . 02 . 2009

### செல்வி உசாலினி (உசா) மகேந்திரம்

30.03.2009

பேச்சினிலே இனிமை கொண்டாய்
பார்வையிலே கனிமை கொண்டாய்
பழகியவர் மனதி லெல்லாம்
பண்புடையாள் என்றானாய்
எமையெல்லாம் கலங்க வைத்து
உந்தன் விழி மூடியதேனோ?
நீண்ட துயில் நீர் ஆனாலும்
நாம் உன்னை என்றும் மறவோம்.

ஊரெழு கிழக்கு,
ஊரெழு. (83865) குடும்பத்தினர்.

## OBITUARY

**Annaranee Phuspavathy Fitch**- Beloved wife of late A.A.Fitch (Formerly of AIR CEYLON & Macknnions - Jaffna, Branch Manager) much adored mother of Angiline (Canada), Angela (Australia) and Anushiya (Canada) and mother - in- law of Philip Alexander (Canada) and Sanmuga (Australia), grand mother of Jonathan, Sera, Thurushika and Lakrshana passed away peacefully on 24th march 2009. Funeral held on Saturday 28th March 2009 at Hamilton. Ontrario, Canada.

*T.No.00613 97994232*
*Australia.* (83975)

Informant:
**S.Sanmuga.**

## மரண அறிவித்தல்

### திருமதி மங்கையர்க்கரசி இராஜரத்தினம்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வேலணை கிழக்கில் வாழ்ந்து தற்போது வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமான திருமதி மங்கையர்க்கரசி இராஜரத்தினம் 28.03.2009 சனிக் கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார்காலஞ்சென்ற சிவசம்பு- யோகம்மா தம்பதியரின் மகளும், சுந்தரம் பிள்ளை- சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற இராஜரத்தினம் (முன்னாள் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர், வேலணை) அவர்களின் அன்பு மனைவியும், சிவநாதன் (முன்னாள் பணியாளர், வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), இராஜேஸ்வரி, சோதிநாதன் மயூரநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானசௌந்தரி(விவாக, பிறப்பு,இறப்பு பதிவாளர், வேலணை), பத்மநாதன், ஜெசிந்தா, ஜெயந்தா ஆகியோரின் மாமியாரும் வாகீசன், ஆரூரன், அனுராதா, ஆரணி, நமணன், றோசான், மீரா, கவிதா, சேயோன், கார்த்திகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மகேஸ்வரி, காலஞ்சென்ற ஆனந்த நடராசா, ரதி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற இராமசாமி, சிவசோதி, காலஞ்சென்ற ஏகாம்பரம் அவர்களின் மைத்துனியும், ராணி, பஞ்சிதம், காந்தி, சிறி, சுகதா, கண்ணன் ஆகியோரின் பெரியதாயாரும் மோகன், தயாளன், ஜெயந்தன், சுதர்சன், முகுந்தன், திலீபன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(30.03.2009) திங்கட்கிழமை மகிந்த மலச்சாலையில் (கல்கிசை) 9.00 மணி முதல் 6 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் 31.03.2009 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக பி.பகல் 1.30 மணிக்கு கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6,1/2 Vaverset Place,
Colombo-06.
T.P: 2589310, 2360422

தகவல்:
பிள்ளைகள்.

## எரிகாயத்திற்கு இலக்கானார்

யாழ்ப்பாணம், மார்ச் 30

தொங்கியவாறு இருந்த விளக்கில் தலைமோதியதில் விளக்கு சரிந்து மண்ணெண்ணெய் உடம்பில் ஊற்றியதால் திடீரென தீப்பற்றி இளம் குடும்பஸ்தர் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இச்சம்பவம் மட்டுவில் மடத்தடியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த மா.ரவி (வயது 40) என்பவர்எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதாரவைத்திய சாலையில்அனுமதிக் கப்பட்டுள்ளார்.

(203-207)

## சித்திரைப் புத்தாண்டையொட்டி மாட்டு வண்டில் சவாரிப் போட்டி

வலி.வடக்கு,மார்ச் 30

யாழ்.மக்கள் எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் புத்தாண்டையொட்டி மாட்டு வண்டில் சவாரிப் போட்டியொன்று எதிர் வரும் 12 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு நீர்வேலி மாட்டு வண்டில் சவாரித் திடலில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

இந்த மாட்டு வண்டில் சவாரிப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள போட்டியாளர்களை உரிய நேரத்திற்கு சவாரித் திடலுக்கு சமுகம் தரும்படி ஏற்பாட்டாளர்கள் வேண்டியுள்ளார்கள். போட்டியில் வெற்றிபெறும் போட்டி யாளர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (203-86)

## உயிரிழந்தோர் எண்ணிக்கை 46 ஆக அதிகரிப்பு

கொழும்பு,மார்ச் 30

முல்லைத்திவிலிருந்து பெப்ரவரி 11 ஆம் திகதி முதல் மார்ச் 14 ஆம் திகதி வரை திருகோணமலைக்கு கப்பலில் அழைத்து வரப்பட்டு திருகோணமலை, கண்டி, கொழும்பு ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள காயமடைந்தவர் கள் மற்றும் நோயாளர்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை நேற்று முன்தினம் சனிக்கி ழமை வரை 46 ஆக அதிகரித்துள்ளது.

திருகோணமலை வைத்தியசாலையில் 09 பேரும், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 05பேரும் உயிரிழந்துள்ளனர்.

புதிதாக 33 குழந்தைகள் பிறந்துள்ளன. திருகோணமலைக்கு கூட்டிவரப்பட்ட 3 ஆயிரத்து 635 பொதுமக்களில் திருகோணமலை மாவட்டத்திற்கு வெளியே 3 ஆயிரத்து 236 பேர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அந்த விவரம் வருமாறு:-

வவுனியா வைத்திய நலன்புரி முகாம்- 2 ஆயிரத்தி 12, மன்னார் வைத்திய சாலை- 908, கொழும்பு தேசிய வைத்தியசாலை- 61, கண்டி போதனா வைத்தியசாலை-54, மகரகம போதனா வைத்தியசாலை-01, பொலனறுவை வைத்தியசாலை-100, கந்தளாய் ஆதார வைத்தியசாலை-57, தம்பலகமம் வைத்தியசாலை-35.

நேற்று முன்தினம் சனிக்கிழமை வரை திருகோணமலை வைத்தியசாலையில் பெப் ரவரி 11 தொடக்கம் அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தி 885 ஆகும் எனத் தெரிவிக்கப் பட்டது. (9)

## கூடைப்பந்தாட்டப் போட்டி

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்ட சங்கம் நடத்தி வரும் லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட் டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறும் ஆட்டங்களில் விவரம் வருமாறு:-

* கோப்பாய் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட் டுக்கழகம்.
* யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற் கல்வி அணி எதிர் யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம். (203-86)

### காணி விற்பனைக்கு

றக்கா வீதியில் 1½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. (பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையில்).

தொடர்பு:-T.P: 021 222 6875

### விற்பனைக்கு

கடை நிலை, கதவு (மரம்)விற்பனைக்குண்டு

தொடர்பு:- 222 2573

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர் சிவன் கோவில் ஈழத்துச் சிதம்பரம்

### வருடாந்த பங்குனி மகோற்சவ

### 2 ஆம் திருவிழா விஞ்ஞாபனம் 31.03.2009

**சிவனடியார்களே!**

நிகழும் சர்வதாரி வருடம் பங்குனி மாதம் 18 ஆம் திகதி 31.03.2009 செவ்வாய்கிழமை 2 ஆம் திருவிழா நடைபெற இருப்பதனால், அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு மூலமூர்த்திகளான சிவலிங் கப்பெருமானுக்கும், ஆண்டிகேணி ஐயனாருக்கும் அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து சுவாமி வீதியுலாவும் நடைபெறும். மாலை சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் வசந்த மண்டபப் பூசை நடைபெற்று மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அன்னப்பட்சியில் சுவாமி வீதியுலாவும் நடைபெறும்.

அன்றையதினம் சிவனடியார்கள் அனைவரும் வருகை தந்து எம்பெருமானை வணங்கி இஷ்ட சித்திகளை பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- கோவில் தவில் வித்துவான்களுடன் அமரர் N.R.K. கோவிந்தசாமியின் புதல்வர்கள் இரத்தினகுமார், வாகீசன் குழுவினரது நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெறும்.


ஆ.அம்பலவிமுருகன்,
மு.சுந்தரலிங்கம்,
ஆதீன கர்த்தாக்கள்.

2 ஆம் திருவிழா
உபயகாரர்கள்,
மாப்பணவூரி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பூவுலகில்: 25.01.1925

விண்ணுலகில்: 01.03.2009



Graphic : Ithayam

அமரர்

### தம்பு திருநாவுக்கரசு

இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இராமுப்பிள்ளை வீதி,
கொக்குவில் மேற்கு.

குடும்பத்தினர்

## கண்ணீர்க் காணிக்கை



எமது பாடசாலையின் உப அதிபரும் கணித ஆசிரியருமான

### குண்டுமணி திரவியநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இமையாணன்
அ.த.க.வித்தியாலயம்,
வல்வெட்டித்துறை.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசார ஊழியர்கள்,
மாணவர்கள்.

**அன்பான பெற்றோர்களே...!**

உங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டவர்கள் நீங்கள். பாடசாலை விடுமுறை நாட்களில் சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்களுடன் கூடிய கற்கை நெறியினை கற்பதற்கு இன்றே ASIAN - CSC உடன் இணைந்து கொள்ளுங்கள்.

### சிறார்களிற்கான கணினி கற்கைநெறிகள்

பாடசாலை மாணவர்களுக்கான முழுமையான பயிற்சி நெறி

Age 8-14 Years

- Junior Diploma in Computer Science
- Junior Diploma in Graphic & Animation
- Junior Diploma in Computer Programming
- Junior Diploma in Digital Creativity

KIDS

காலம் 3 மாதங்கள்

e-KIDS DIVISION

இலவச பாடபுத்தகத்துடன் கூடிய கற்கை நெறி



Show the world
what you can do with IT?

புதிய பிரிவுகளுக்கான விபரங்கள் மற்றும் பதிவுகளை 30th திகதி திங்கட்கிழமை முதல் எமது யாழ்நகரம் மற்றும் நெல்லியடி பயிற்சி மையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

Course Option • JDCS • JDGA • JDCP • JDDC

மேலதிக விபரங்களுக்கு....

### ASIAN- CSC COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் Tel :021 222 5677

கிளை

கொடிகாமம் வீதி, நெல்லியடி Tel :077-3122198

நூலாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# தென்மராட்சியைச் சேர்ந்த 24 பயனாளிகள் சுயதொழில் கொடுப்பனவுக்குத் தெரிவாகினர்

யாழ்ப்பாணம், மார்ச் 30

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 24 பயனாளிகளுக்கு சுயதொழில் நிவாரண 2ஆம் கட்டக் கொடுப்பனவுக்கான பட்டியல் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

உரியவர்கள் தமது ஆள் அடையாள அட்டை, குடும்பப் பங்கீட்டு அட்டை என்பவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளும் படி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

தெரிவானோர் விவரம் வருமாறு:

சி.மகேஸ்வரி (குடமியன், வரணி), வி.பரமேஸ்வரி (சரசாலை தெற்கு), இ.ஜெயரஞ்சினி (தாவளை, இயற்றாலை), க.இன்பராஜ் (மீசாலை வடக்கு), ஆ.கிறீஸ்ரீனம்மா (சாவகச்சேரி, கச்சாய் வீதி), ப.ஸ்ரீலங்கேஸ்வரி (கள்ளிநகர், கைதடி கிழக்கு).

த.சின்னம்மா (மட்டுவில் கிழக்கு), க.நல்லம்மா (கொடிகாமம், கோயிலாமனை), ஆ.கந்தசாமி (கட்டுக்காணி லேன், சாவகச்சேரி), தே.கிறிஸ்ரி (சரசாலை மத்தி), செ.புஸ்பராணி (கெற்பெலி மேற்கு, மிருசுவில்), ச.சசிகலா (கரம்பைக்குறிச்சி மேற்கு, வரணி), லே.நந்தினீஸ்வரி (கைதடி, தென் கிழக்கு), ந.லோகநாயகி (கென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி), தி.சேதுலட்சுமி (மீசாலை தெற்கு).

க.நாகமுத்து (கைதடி தென்கிழக்கு, த.இராஜேஸ்வரி (குடமியன், வரணி) சி.சிவலட்சுமி (கென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி), யோ.கமலம் (கச்சாய் வீதி, கொடிகாமம்), நி.புஸ்பராணி (நுணாவில் சந்தி), நா.புஸ்பராணி (குடமியன், வரணி), ஸ்ரீவித்தியா (மட்டுவில் தெற்கு), வ.பத்தினி (நுணாவில் மேற்கு), ச.பாக்கியம் (சரசாலை வடக்கு). (203-54)

# வலி.தென்மேற்குப் பிரதேச சபையால் புதிய கொல்களம் அமைக்க ஏற்பாடு

ஆனைக்கோட்டை, மார்ச் 30

காக்கை தீவில் அமைந்துள்ள கொல்களம் அண்மையில் ஏற்பட்ட ''நிஷா'' வால் செயற்பட முடியாத அளவுக்குப் பாதிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் அண்மையாக உள்ள கடற்கரையில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கும், குடியிருப்பாளர்களுக்கும் இக்கொல்களத்தால் சிரமம் ஏற்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனால் இக்கொல்களத்தை இடம் மாற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வலி.தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

பாதிப்படைந்த காக்கைதீவுக் கொல்களத்தைப் புரனமைப்பதற்கு, கூடிய அளவான நிதி தேவைப்படுவதாலும் இதை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பண்டத்தரிப்புக் கிராம எல்லைக்கு உட்பட்ட பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கு- காடாப்புல வைத்தியசாலைக்கு அண்மையில் பிரதேச சபைக் காணியில் மேற்படி கொல்களம் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

எனினும் புதிய கொல்களத்தினை அமைப்பதற்குரிய நிதி போதிய அளவில் இல்லாமையால் உடனடியாக இதை அமைக்க முடியாதுள்ளதாகவும், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏதேனும் இதற்கு நிதியுதவி வழங் கும் பட்சத்தில் காலதாமதமின்றி இவ் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (203-20)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெறப்பட்ட மின்கம்பிகளில் சிக்கி இருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

சட்ட விரோதமாகப் பெறப்பட்ட மின் கம்பிகளில் சிக்கி இருவர் காயமடைந்தனர்.

இச் சம்பவங்கள் கடந்த வியாழக்கிழமை இரவு சாவகச்சேரி, கச்சாய் ஆகிய இடங்களில் இடம்பெற்றன.

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் சட்ட விரோதமாக மின்கம்பி பொருத்தப்பட்ட கம்பிகளில் ஒரு பகுதி கீழே விழுந்தபோது அவ்வழியே சென்ற அதே இடத்தைச் சேர்ந்த பரமானந்தம் அஜந்தன் (வயது-26) என்பவர் மின்சாரம் தாக்கி தூக்கி வீசப் பட்டு சுயநினைவை இழந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதேவேளை கச்சாய் பகுதியில் சட்ட விரோதமாக பெற்றப்பட்ட மின் வயர் (கம்பி) நடந்து சென்ற அதே இடத்தைச் சேர்ந்த பீ.குமார் (வயது- 32) என்பவரின் கழுத்தில் தாக்கியதில் தொண்டைப் பகுதி எரிகாயத்திற்கு இலக்கானது.

இந்த நபர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (203-207)

# சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் 10 'கோப் சிற்றி'கள் கிராமப் புறங்களில் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மார்ச் 30

குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் மினி 'கோப் சிற்றி'கள் அமைப்பதற்குரிய நிதி வந்து சேர்ந்துள்ளது என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் தெரிவித்தார்.

இந்த நிதி வந்து சேர்ந்ததை அடுத்து எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் பத்து மினி 'கோப் சிற்றி'களை நுகர்வோர் வசதிகருதித் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் தமது எல்லைப் பரப்பில் அதாவது கிராமப்புறங்களில் குறைந்தது மூன்று மினி 'கோப் சிற்ற' விற்பனை நிலையங்களைத் திறந்து வைக்கவேண்டும்.

இதற்கென ஒவ்வொரு சங்கத்திற்கும் 9 லட்சம் ரூபா நிதி வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் இந்த 10 மினி 'கோப் சிற்றி' விற்பனை நிலையங்களை திறப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (203-224)

# சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான புதிய விண்ணப்பம் இன்று முதல் பெறலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான புதிய நடைமுறைகள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் அறிவிக்கப் பட்டுள்ளன.

புதிய சாரதி அனுமதிப்பத்திரம் (Smart Card) பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை இன்று திங்கட்கிழமை முதல் யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அலுவலக் நாள்களில் பிற்பகல் 2 மணி வரைஇந்த விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

இதுவரை காலமும் பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்தல், இணைப் பிரதி பெறல் மற்றும் சேதமடைந்த சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்தல் ஆகிய செயற்பாடுகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளதுடன் இனிவரும் காலங்களில் இந்நடவடிக்கைகள் யாவும் மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்கத்தினாலேயே மேற்கொள்ளப்படும் என்று யாழ்.மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

அத்துடன், புதிய சாரதி அனுமதிப் பத்திரம் (Smart Card) பெறுவதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கீழ்வரும் அறிவித்தல்களுக்கமைய படிவங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

* விவரங்களை ஆங்கில முழு (Block Letters) எழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.
* கறுப்பு நிற பேனாவை மட்டுமே கட்டாயம் பயன்படுதல் வேண்டும்.
* எழுத்துகள் யாவும் வழங்கப்பட்டுள்ள கூடுகளில் உள்ள கோடுகளில் படாதபடி நிரப்புதல் வேண்டும்.
* பொருத்தமான விடயத்தை நிரப்பும் போது ''X'' போன்ற அடையாளம் இடுதல் வேண்டும்.
* ஒருவருக்கு ஒரு விண்ணப்பப் படிவம் மட்டுமே வழங்கப்படும். அலுவலகத்தால் வழங்கப்படும் படிவத்தைத் தவிர வேறு படிவங்கள் (போட்டோப் பிரதிகள்) ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
* புதிய கடவுச்சீட்டுக்கு பயன்படுத் தப்படும் வர்ணத்திலான (Colour) புகைப்படப் பிரதி 03 சமர்ப்பிக்கப்பட வேண்டும். புகைப்படத்தின் பின்புறம் (Background) வெள்ளை நிறமாக இருத்தல் அவசியம். சமர்ப்பிக்கப்படும் படத்தின் மாதிரி இணைக்கப்பட்டுள்ளது.
* விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது விண்ணப்பதாரி நேரில் சமுகம் தந்து கை விரல் அடையாளமும், கையொப்பமும் இடுதல் வேண்டும்.
* அடையாள அட்டைப் பிரதி, பிறப்புச் சான்றிதழ், போட்டோப் பிரதி கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் (மூலப் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்).
* சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு ஆவணங்களிலும் திருத்தம் செய்திருத்தல் அனுமதிக்கப்படமாட்டாது. திருத்தம் உள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
* சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் பத்திரம் மற்றும் ஆவணங்கள் தெளிவாக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பப்படிவத்தில் எந்த இடத்திலும் தேவையற்ற அடையாளங்களோ, கீறல்களோ காணப்படக் கூடாது.
* உறுதிப்படுத்தப்பட்டு வழங்கும் அனைத்து ஆவணங்களும் 2 மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்டவையாக இருத்தல் வேண்டும். உறுதிப்படுத்துபவரின் கையொப்பம், பதவிமுத்திரை, திகதி ஆகியவற்றுடன் இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பப்பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்படும் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தில் கேட்கப்பட்டுள்ள விவரங்களுடன் விண்ணப்பதாரியின் குருதியின் வகை (Blood Group) கட்டாயமாகக் குறிப்பிடுதல் வேண்டும். (9)




# தலைக் கவசங்களுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்.நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் மோட்டார் சைக்கிள் செலுத்துவோர் அணியும் தலைக்கவசங்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், அதன் விலையும் கிடுகிடுவென அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஒரு சாதாரண தலைக் கவசம் 600 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது.

முதலாம் திகதி தொடக்கம் போக்குவரத்து நடைமுறைகளை பொலிஸார் தீவிரமாக அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் அதே நேரத்தில் தலைக் கவசங்களுக்கும் 'மவுசு' ஏற்பட்டுள்ளது. (203-224)



சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெளியிடப்பட்டு வரும் 'ஞானச்சுடர்' சஞ்சிகையின் எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கவிஞர் வ.யோகானந்தசிவம், யாழ்.மாநகசபையின் உத்தியோகத்தர் எஸ்.ராஜேந்திரன், பண்டிதர் தி.பொன்னம்பலவாணர், இளைப் பாறிய அதிபர் செல்வி அ.கந் தையா ஆகியோருக்கு எழுத்தாளர் ப.சிவானந்தசர்மா முதலிருவருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சுவாமி செ.மோகனதாஸ், ஆசிரியர் புனிதவதி சண்முகலிங்கம் ஆகியோர் மற்றிருவருக்கும் நினைவுக் கேடயங்களை வழங்குவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் இரத்தினசிங்கம்
இரத்தினாம்பாள்

தோற்றம்: 05.01.1933
மறைவு: 28.02.2009

அமரர் ஐயாத்துரை இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அவர்களின் பாரியாரின் மறைவு எங்களைத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. எங்கள் குடும்பத்துடன் இரண்டறக் கலந்து அன்பும் பாசமும் காட்டி வாழ்ந்த பெருந்தகையாவார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முதலி அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(சி/557666)

க.இராசரத்தினமும்
குடும்பத்தினரும்.

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1075 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மகரம் 03 33 38 39

27-03-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 500000001 - 500020938

ஜக்பொட் பரிசு ரூபா. 3,959,700/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 228,463 | 20/- | 4,569,260/- |
| 2 இலக்கங்கள் | 21,051 | 40/- | 842,040/- |
| 1 இல. + லக்கினம் | 20,759 | 60/- | 1,245,540/- |
| 2 இல. + லக்கினம் | 1,889 | 200/- | 377,800/- |
| 3 இலக்கங்கள் | 554 | 1000/- | 554,000/- |
| 3 இல. + லக்கினம் | 55 | 10,000/- | 550,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,959,700/- | - |
| மொத்தம் | | | 8,738,640/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 272,779 | | 9,238,640/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,980,350/-

தொடர் இலக்கம் 400000001 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2009 மார்ச் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கண்டி | 50000107-3-38 |
| ஹம்பாந்தோட்டை | 50000313-2-09 |
| பதுளை | 50000442-7-08 |
| கண்டி | 50000701-5-04 |
| மட்டக்களப்பு | 50000731-4-49 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## வலி.கிழக்கில் புகையிலைச் செய்கைக்குப் பாதிப்பில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 30

வலி.கிழக்குப் பிரதேசத்தில் பயிரிடப்பட்ட புகையிலை இந்த முறை நல்ல நிலையில் உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டையும் பார்க்க இம்முறை இப்பிரதேசத்தில் அதிகளவில் புகையிலை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பயிரிடப்பட்ட புகையிலைக் கன்றுகள் நல்ல நிலையில் காணப்படுகின்றன.

ஒருசில இடங்களில் புகையிலை கன்றுகள் ஒருவித நோயினால் தாக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(203-224)

## புல்மோட்டையிலிருந்து மன்னார் ஆஸ்பத்திரிக்கு 102 பேர் சென்றனர்

மன்னார், மார்ச் 30

வன்னியில் இடம்பெறும் மோதல்களில் காயமடைந்து புல்மோட்டை வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்டவர்களில் 102 பேர் மன்னார் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

மேலதிக சிகிச்சைக்காக மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர்களில் விநாயக ராஜசிங்கம் சுபத்திரா (வயது 39) என்பவர் நேற்று முன்தினம் மரணமானார்.

வன்னியில் இருந்து 1,300 பேர் இதுவரை மேலதிக சிகிச்சைக்காக மன்னார் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## வீதிக்கடவைக்கு வர்ணம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்.நகர் ஸ்ரான்லி வீதியில் பாதசாரிகள் வீதியைக் கடந்து செல்வதற்குரிய வீதிக் கடவை வர்ணம் தீட்டப்பட்டு வருகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இவ் வீதிக்கடவைக்கான வர்ணம் பூசப்பட்டு வருகின்றது.

(203-224)

சோதிடம்

கல்வியில் சித்தி உண்டா?
உத்தியோகம் கிடைக்குமா?
வியாபாரம் வெற்றியாகுமா?
வெளிநாடு போகலாமா?
நோய் நீங்குமா?
திருமணம் நிகழுமா?

ஆமாம்! உங்கள் கேள்விகள் எதுவாயினும் உரிய பதில் உடனே தரப்படும்.
ஜாதகம், கைரேகை, எண்சோதிடம் மூலமாகப் பலன்களை அறிய உடனே விரையுங்கள்!
திருமண சேவையும் உண்டு.
சிவானந்தன்,
பிரபலசோதிடர்,
05, வைமன் வீதி, நல்லூர்.
(83882)

## வவுனியாவில் இளைஞர் ஒருவர் குண்டை வெடிக்க வைத்துத் தற்கொலை

கொழும்பு, மார்ச் 30

வவுனியா, வாரிக்குட்டியூரில் தற்கொலைப் போராளியொருவர் குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரைக் கண்ட இரு இளைஞர்கள் தப்பியோட முயற்சித்ததாகவும் அதன்போது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்து கீழே விழுந்ததாகவும், விழுந்தவரைப் பிடிக்கச் சென்ற வேளையே சுமார் 100 மீற்றர் தொலைவில் அவர் குண்டை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்ததாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

எனினும் அடுத்தவர் தப்பிச் சென்று விட்டதாகவும் அவரைக் கண்டு பிடிக்க தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இச்சம்பவத்தில் இராணுவத்தினருக்கு எந்த விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-6)

# ஆண்டுகள் ஐந்தில்....!



திருமதி வைகுந்தராஜா தையல்நாயகி
(மண்டைதீவு)
திதி: சதுர்த்தி (30.03.2009)

மண்மகிழ்: 07.05.1950 கண்நேகிழ்: 25.03.2004

அம்மா உமைப்பிரிந்து
அறுபது மாதங்கள்....!
அழகுற வாழ்விற்காய்,
திசைக்கொன்றாய் நாம்
சிதறித்தான் இருந்தாலும்
சிதையாத உம் நினைவுகள்
நிதம் எமை சேர்த்துவைக்கும்...!

(83859)

சிவன்கோயில் வீதி,
சாவகச்சேரி.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

# இருபத்தோராம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
11 . 04 . 1951



மறைவு
18 . 03 . 1988

அமரர் சண்முகானந்தம் புவனேந்திரராஜா

அன்பாய்ப் பேசி பண்பாய் வளர்த்து
எமக்காக நிதம் மழலை மொழிகள் பேசி
உம் மார் மீதும் தோள் மீதும் சுமந்து
எம்மை கை பற்றி நடை பழக்கிய தந்தையே!
இன்று நாம் அறியாப் பாதையிலே....!
இடை நடுவில் சென்றதேனோ
இருபத்து ஆண்டுகள் உருண்டோடிச் சென்றாலும்
உம் நீங்காத நினைவுகள் எம் நெஞ்சத்தில் நிலைத்திருக்கும்.

(83879)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி (சுவிஸ்),
மதுரன் (மகன்) - பிரியா (மருமகள்), மதுஷன் (பேரன்) - லண்டன்
மைதிலி (மகள்) - கஜன் (மருமகன்), [illegible]
மற்றும் சகோதரர்கள்,
மைத்துனிமார், மைத்துனர்மார் (ராசன், ரவி).

259/2, A.V. வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

# முடிவில்லாத் துயரலையில் ஏழாவது ஆண்டு

மலர்வு
22 . 02 . 1967



உதிர்வு
30 . 03 . 2002

திருமதி அரசகேசரி றமிலா

ஆண்டுகள் ஏழோடி மறைந்தாலும் உன்முகம்
மறையாததேன் மனத்தி லின்று- ஏழு
ஆண்டுகளும் பட்ட வேதனை போதுமினி
தாங்காது மனம் இன்று
ஆண்டவனைத் தினம் ஒவ்வொரு நொடியும்
இரு கரம் கூப்பி நின்று- நான்
வேண்டுவதெல்லாம் உன்னுடன் விரைவாய்
சேர்த்திடு எனை என்று.

"[illegible]பாசா",
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(83952)

அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதவள ஆற்றலை மேம்படுத்த கல்விச் சுற்றுலாவும் தலயாத்திரையும்

யாழ்ப்பாணம், மார்ச் 30

ஆசிரியர் வாண்மை விருத்தி நிறுவகத்தின் ஏற்பாட்டில் அதிபர், ஆசிரியர், தொழில் வாண்மையினர், ஆர்வமுள்ளோருக்கு மனிதவள ஆற்றலை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டத்தில் பண்பாட்டு மானுட வியல் கல்விச் சுற்றுலாவும், தல யாத்திரையும் மேற்கொள்ளப்படவுள்ளன.

தென்னிந்தியா, வட இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, தாய்வான் ஆகிய நாடுகளில் மேற்படி செயற்றிட்டம் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் தென்னிந்தியா செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இச் செயற்றிட்டத்தில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் தமது சுய விபரங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் 'பணிப்பாளர், மனிதவள மேம்பாட்டுப்பிரிவு, ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம், 226, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பணிப்பாளர் பா. தனபாலன் கேட்டுள்ளார். (9)

## உபகரணம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 30

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்துடன் அறவழிப் போராட்டக்குழு இணைந்து நடத்திய பயிற்சி நெறியின் பயிற்சியாளர்களுக்கான தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அறவழி தொழில் பணியகத்தில் நடைபெறவுள்ளது.

அறநெறிப் போராட்டக் குழுத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும் சிறப்பு விருந்தினராக சர்வோதய நிறுவன மாவட்ட இணைப்பாளர் ஏ.கே.சிவசுப்பிரமணியமும் கலந்து கொள்வர். (9)

# அரசுடன் சேர்ந்திருக்கும் பல ஆசாமிகள் போலிக் கலாநிதிப் பட்டம் பெற்றவர்களாம்

## எஸ்.பி.திஸநாயக்கா குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 30

அரசில் இருக்கும் அதனுடன் சேர்ந்திருக்கும் அநேகமானவர்கள் போலியான கலாநிதி பட்டங்களைப் பெற்றுள்ளனர் என்றும் இந்த அசிங்கமான நடவடிக்கையைத் தடைசெய்ய அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி.திஸா நாயக்கா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

போலியான கலாநிதிப் பட்டங்கள் பெறுவதைத் தடுப்பதற்காக அரசு குழுவொன்றை நியமித்துள்ளது.இந்த சிறந்த நடவடிக்கைக்கு நான் அரசுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், அரசில் இருக்கும் அதிகமானோர் இவ்வாறான கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர்களே. வெட்கமில்லா அதைப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கின்றனர்.

இதனால், பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் பட்டங்களுக்கு அபகீர்த்தி ஏற்படுகிறது. அரச தரப்பினர் பெற்றிருக்கும் இந்தப் பட்டங்கள் இல்லாது செய்யப்படவேண்டும் = என்றார். (அ-சி)



'இன்று பயிரிடுவோம், நாளை அறுவடை செய்வோம்' என்ற செயற்றிட்டத்தில் 20 லட்சம் மரக்கன்றுகளை நடும் திட்டம் அகில இலங்கைக் கூட்டுறவுப் பணியாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் ஆரம்ப வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிறந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமாகத் தெரிவான யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கான விருதினை அதன் தலைவர் ப.கிரிதரனிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:தந்தன்)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 30

கொய்யாத்தோட்டம் ஞானசெல்வ விநாயகர் ஆலய வருடாந்த அலங்காரப் பெருந்திருவிழா கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 6 ஆம் திகதி 108 சங்காபிஷேகம், பஞ்சமுக அர்ச்சனை, திருவீதியுலா என்பவற்றுடன் விழா நிறைவுறும். (9)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 30

அளவெட்டி மேற்கு காட்டுப்புலம் ஆதிகாளி அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளன.

பிற்பகல் ஒரு மணியளவில் மகேஷ்வர பூசை இடம்பெறும். (9)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 30

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 8 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (9)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 30

நாயன்மார்கட்டு ஸ்ரீவெயிலுகந்த விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 8 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (9)

# பொருளாதார நெருக்கடியால் கடந்த மாதம் ஆடைத் தொழிற்சாலைகளுக்கு மூடுவிழா!

## ஐக்கிய தேசியக் கட்சி தகவல்

கொழும்பு, மார்ச் 30

இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மாதம் மாத்திரம் 88 ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு ஆயிரக்கணக்கானோர் வேலைவாய்ப்புகளை இழந்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான எஸ்.பி.திஸாநாயக்கவே இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கையில் பணவீக்கம் அதிகரித்து பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. 2004 முதல் 2008 வரை அரசு அதிகமான பணத்தை அச்சடித்தமையே இந்தப் பணவீக்கத்திற்குக் காரணம். அந்தப் பணத்தை அரசு புழக்கத்திற்கு விடவுமில்லை.

சர்வதேச நிதி நிறுவனங்களும் முன்பு போல் இலங்கைக்கு நிதி உதவி வழங்க இப்போது முன்வருவதில்லை. இதனால், எமது நாட்டு பொருளாதாரம் இப்போது மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் அரசு இப்போது கடன் கேட்டுள்ளது. இந்தக் கடனை வழங்க அந்த நிதியம் 17 நிபந்தனைகளை விதித்துள்ளது என்று தெரிய வருகின்றது.

அந்த நிபந்தனைகள் எவையும் பாரதூரமானவையாகத் தெரியவில்லை. மனித உரிமை மீறல்கள் போன்றவற்றுக்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்தால் இந்த 17நிபந்தனைகளுக்கு உடன்படுவது அரசுக்கு ஒரு பெரிய விடயம் அல்ல.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து அரசு ஓரளவாவது தப்ப வேண்டும் என்றால் சர்வதேச நிதி நிறுவனங்களிடம் பணம் பெற்றே ஆகவேண்டும். இல்லையேல் நிலைமை நாள் செல்லச் செல்ல மிக மோசமாகிவிடும்.

அரசு இந்த மாகாணசபைத் தேர்தல்களைத் துண்டு துண்டாக நடத்துவதும் தற்போதைய நிதி நெருக்கடிக்கு மற்றொரு காரணமாகும். இந்த மாதிரித் தேர்தல் நடத்துவதன் மூலம் அதிக பணம் வீண் விரயமாகின்றது.

இந்தப் பொருளாதார நெருக்கடி காரணமாக பல துறைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. கடந்த மாதம் மாத்திரம் 88 ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு ஆயிரக்கணக்கானோர் தொழில்வாய்ப்பை இழந்துள்ளனர்.

ஆகவே, நாட்டில் உள்ள புத்திஜீவிகளுடன் கலந்தாலோசித்து அரசு இந்தப் பொருளாதார நெருக்கடியை நீக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் = என்றார். (சி)



'சுமநெகும' திட்டத்தில் யாழ்.மாநகராட்சி மன்ற முன்பள்ளிகளுக்கான உபகரணங்களை யாழ்.மாநகராட்சி மன்றச் செயலாளர் இ.இரத்தினசிங்கம் அரசடி ஒட்டுமடம் 'மலரும் மொட்டுக்கள்' முன்பள்ளி ஆசிரியையிடம் வழங்குவதையும் அருகில் சனசமூகநிலைய உத்தியோகத்தர் எஸ்.சோமசுந்தரம் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:லக்ஸ்மன்)

## இலவச முறிவு,நெரிவு வைத்திய சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்ப்பாணம் கொட்டடியில் உள்ள மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் தினமும் காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை இலவச முறிவு, நெரிவு வைத்திய சேவை நடைபெற்று வருகிறது. (9)

# தவக்காலச் சிந்தனை

## கல்லை அகற்றுங்கள்

தாம் அன்பு செய்த நண்பன் இலாசர் இறந்து அடக்கம் செய்யப்பட்டபின் ஆண்டவர் அந்த அற்புதத்தை செய்வதற்குமுன் யூதர்களிடம் "கல்லை அகற்றி விடுங்கள்" (யோவா 11:39) என்றார். அழுகிய உடலுக்கு உயிர் ஊட்ட முடியும் என்றால் கல்லை அகற்றுவதா முடியாத காரியம்? அன்று யூதரிடம் சொன்னதுபோல் ஆண்டவர் இன்றும் நம்மிடம் பகை விரோதம் ஆகிய கல்லை எங்கள் உள்ளத்திலிருந்து அகற்றுமாறு கூறுகின்றார்.

"பொறுமையுள்ளோர் தக்க காலம் வரை அமைதி காப்பார்; பின்னர் மகிழ்ச்சி அவர்களுள் ஊற்றெடுத்துப் பாயும்" (சீஞா 1:23) என்பதை நாங்கள் மறந்தால் பகை, விரோதம் ஆகிய கற்கள் எங்களிடமும் தோன்றியுள்ளது. அந்தக் கற்கள் எம் உள்ளத்தில் இருந்தால் அவை எங்களை அழித்துவிடும் என்பதை நாம் அறிவோம்.

ஆகவே நம்முடைய பாவங்களையும், காயங்களையும், வேதனைகளையும் தாமே சுமந்து கொண்ட அந்த சிலுவை நாதரை ஏறெடுத்துப் பார்ப்போம். "தாகமாய் இருக்கிறது" (யோவா 19:28) என்று சொல்லி அவர் நம்மை பார்க்கின்றார். ஆண்டவரின் ஸ்பரிசம் கிடைக்க நமது உள்ளத்திலிருக்கின்ற பகை, விரோதம் ஆகிய கற்களை தூக்கி எறிந்து ஒருவரோடு ஒருவர் நல்லுறவு கொண்டு வாழ்வோம்.

அ.[illegible]
குருநகர்.

# சிறந்த நுகர்வோர் வங்கி சேவை வழங்கும் நிறுவனமாக 'ஹற்றன் நஷனல்' வங்கி இரண்டாவது தடவையும் தெரிவு

சிறந்த நுகர்வோர் வங்கி சேவை வழங்கும் நிதி நிறுவனமாக ஹற்றன் நஷனல் வங்கி தெரிவாகியுள்ளது.

இதற்கான விருதினை அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற நிகழ்வில் மேற்படி வங்கியின் தலைமைப் பொது முகாமையாளரான இராசேந்திரம் தியாகராஜா பெற்றுக் கொண்டார்.

சுமார் இருபத்தி இரண்டு நாடுகளில் இருந்து நூற்றி இருபதுக்கும் மேற்பட்ட வங்கிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.


இந்த நிகழ்வில் மேற்படி விருது வழங்கப்பட்டது.


ஹற்றன் நஷனல் வங்கி சார்பாக அதன் பிரதம பொது முகாமையாளர் மற்றும் வட பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் ஏ.வி.மீடில் உள்ளிட்ட ஐவர் அடங்கிய குழுவினர் சென்றிருந்தனர்.


மேற்படி விருதானது இரண்டாவது தடவையாகவும் ஹற்றன் நஷனல் வங்கிக்கே கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழுப்பு அதிகரிக்க முட்டை காரணமா?







கேள்வி: முட்டை சாப்பிடுவது உடலுக்கு நன்மையா? தீமையா? ஒரு சில வைத்தியர்கள் முட்டை கட்டாயமாக உணவில் இருக்கவேண்டும் என்கிறார்கள். இன்னும் சிலர் முட்டை சாப்பிட்டால் கொழுப்பு அதிகரித்து இருதய நோய் ஏற்படும் என்கின்றார்கள். உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: உங்கள் கேள்வியை வைத்து முட்டை பற்றி ஒரு பட்டிமன்றமே நடத்த லாம். ஏனென்றால், முட்டை சாப்பிடுவத னால் நன்மைகளும் இருக்கின்றன; தீமை களும் இருக்கின்றன. ஆனால் யார், எப்போது, எவ்வளவு முட்டை சாப்பிடலாம் என்பதை வைத்துத்தான் உங்கள் பட்டிமன்றத்தில் தீர்ப்பு கூறமுடியும். முட்டை நல்லதா - கெட்டதா என்பது - எத்தனை முட்டைகளை நீங்கள் சாப்பிடுகின்றீர்கள் என்பதில் தங்கியுள்ளது.

கொழுப்பு இல்லாத உணவு சாப்பிடுவது அவசியம் என்றொரு சட்டம் இல்லை. எமக்கு - எமது உடல் இயக்கத் துக்கு கொழுப்பு கொஞ்சம் தேவை. கொழுப்பை இயற்கையாகவே எமது உடல் உற்பத்தியாக்குகிறது. எமது உடல் கலங்களின் அடிப்படையாக கொழுப்பு விளங்குகின்றது. கொல ஸ்திரோல் எமது உடலின் ஹோர்மோன் களின் கட்டுப்பாட்டுக்கு உதவுகிறது. எமது உணவு ஜீரணமடையவும் எமது உடல் விட்டமின் D யை உபயோகப் படுத்தவும் கொலஸ்திரோல் தேவைப்படு கிறது.

சாதாரணமாக நல்ல உடல் நலம் உள்ள, தினமும் உடற்பயிற்சி செய்யும், Junk Food என்கின்ற உணவு உண்ணாத வர்கள் பயமில்லாமல் முட்டை சாப்பிடலாம். முட்டையில் மூளைக்கு முக்கியமான Choline என்ற விட்டமின் சத்து உண்டு. உடலில் உள்ள நச்சுத்தன்மையை அகற்றும் Antioxidants வகை Lutein, Zeaxanthin பொருட்களும் கொழுப்பில் உள்ளன.

ஒரு நடுத்தர பரிமாணம் உள்ள முட்டையில் 180 - 190 மி.கிறாம் கொழுப்பு உண்டு. ஒரு மனிதனுக்கு தினமும் 300 மி.கிறாம் கொலஸ்திரோல் தேவைப்படுகிறது. எனவே, ஒரு நாளைக்கு ஒரு முட்டை சாப்பிடுவதனால் பெரிய ஆபத்தொன்றும் வரப்போவதில்லை. ஒரு சிலருக்கு பரம்பரையாகவே உடலில் அதிக அளவு கொழுப்பு சத்து இருக் கின்றது. சிலர் இந்த அதிகளவு கொலஸ்தி ரோல் சத்துடன் தேவைக்கு அதிகமான நிறை (Overweight) கொண்டவர்களா கவும் இருப்பார்கள். இப்படியானவர்கள் கிழமைக்கு 3 முட்டைகளுக்கு அதிகமாக உபயோகிப்பது நல்லதல்ல.

ஒன்றை நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும். எமது இருதய பிரச்சினை களுக்கு கொழுப்பு மட்டும்தான் காரணமல்ல. இந்த கொழுப்பு ஒட்சியேற்றம் அடையும் பொது Free Radical என்கின்ற நச்சுப் பொருள் உருவா கிறது. இதனால் தான் எமது உடலுக்கு அவசியமான கொழுப்பு அழிவுப்பொருளாக உருமாறுகிறது. கொழுப்பு காற்றில் இருக்கும் போது ஒட்சியேற்றம் அடையும். இறைச்சி, பால், முட்டை, பட்டர், வெண்ணைக்கட்டி என்பவற்றின் Processing என்கின்ற தயாரிப்பின் போதும், உணவுப்பொருட்களின் தயாரிப்பு முறைகளான - Firing Curing, Aging மற்றும் Packaging என்கின்ற பொதிப்படுத்தலின் போதும் கொழுப்பு உள்ள உணவுப் பொருள் கள் ஒட்சியேற்றம் அடைகின்றன. மேலும் Fast Foods எனப்படும் உடனடி உணவு களான - பொரித்த கோழி (Fried Chicken) மீன், Hamburghers எல்லாம் கொழுப்பை நச்சு கொலஸ்திரோ லாக்குகின்றன. எனவே, முட்டையைச் சாப்பிடுவதால் மாத்திரம் கொழுப்பு அதிகரிப்பு நிகழாது. ஆனால், கிரமமாக Junk Foods எனப்படும் உணவுகளுடன் முட்டையையும் சேர்த்து உண்பதால் கொலஸ்திரோல் பிரச்சினை உருவாகும்.

சுறுசுறுப்பான குழந்தைகள் - அவர் களது வயதுக்கும் உயரத்துக்கும் எற்ற நிறை உள்ளவர் களாக இருந்தால் தினமும் ஒரு முட்டை கொடுப் பது பாதிப்புத் தராது.

முட்டை அதி உயர் சத்துள்ள உணவு. அதனை முற்றாக ஒதுக்கி விடாதீர்கள். தேவையற்ற Junk Food ஐ உங்கள் உணவு முறைகளி லிருந்து ஒதுக்கி வைத்துவிட்டு உயர் சத்து முட்டையின் பிரயோசனத்தை அனுபவியுங்கள் என்பதே எனது கருத்து.

***

கேள்வி: எனது மகள் 3 வயதும் 6 மாதமும் ஆகிறது. மிகவும் சுட்டி. முன்பள்ளி (Pre School) போகிறாள். அவளது மூளை, புத்திசாதுரிய (Intellectual) வளர்ச்சி மற்றக் குழந்தைகளைப் போலவே இருந் தாலும் அவளது உடல் வளர்ச்சி குறைவு. அவளது நிறை 13 கிலோ கிறாம். மெலிந்த உடல் வாகு. அவளுக்கு அடிக்கடி தடிமல் - இருமல் ஏற்படு கின்றது. ஆனால், காய்ச்சல் இல்லை. பசி நன்றாக இருக்கிறது. இரவில் நன்றாக தூங்குகின்றாள். ஆனால் இரவில் தூங்கும் போது நெஞ்சில் சளி இருப்பது போல் சத்தம் ஏற்படுகின்றது. சிலவேளைகளில் வயிற்றுவலி ஏற்படுகின்றது. அதன் பின்னர் மலம் கழித்தால் சுகமாகி விடுகிறது. சமீபகாலமாக தலைவலி ஏற்படுகிறது. டாக்டர்களிடம் காட்டினால் அந்த வேளைக்கு மருந்து தருகின்றார்கள். சுகம் தெரிகிறது. ஆனால், பூரண சுகம் இல்லை. எனது குழந்தைக்கு ஏதாவது நோய் உள்ளதா?

பதில்: மூன்றரை வயதுக் குழந்தைக்கு 13 கிலோ நிறை பொருத்தமானதே. இச்சிறு குழந்தைகள் 'முன்பள்ளி' போன்று முதலில் கல்வி கற்க வீட்டைவிட்டு வெளியே செல்லும்போது - தடுமல், இருமல் போன்ற தொற்றுகள், காது நோய் என்பன ஏற்படுவது அதிகமாக நேரிடு கிறது. ஆனால், இவை விரைவாக குணமாகி விடும். அடிக்கடி இவை ஏற்படுவதால் குழந்தையின் உடலின் எதிர்ப்புச் சக்தி தூண் டப்படுகிறது. இது பற்றி நீங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை. உங்கள் குழந் தைக்கு கடுமையான நோய் எதுவும் இல்லை. அவர் வளர வளர - இத்தொற்றுத் தாக்கம் குறைந்துவிடும்.

***

கேள்வி: ஆண். வயது 40. நிறை 63 கிலோகிறாம். எனது பிரச்சினை புதுமை யானது. சிறுநீரில் சர்க்கரைச் சத்து உள்ளது. ஆனால், இரத்தத்தை பரிசோதித்து பார்த் தால் சீனி இல்லை. இது நோயா? ஏதாவது மருந்து எடுக்க வேண்டுமா?

பதில்: சிறுநீரில் மாத்திரம் சர்க்கரைச் சத்து இருக்கிறதா என்பதை குறைந்தது மூன்று தடவையாவது இரத்தப் பரிசோதனை செய்து உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படி சிறுநீரில் மாத்திரம்தான் இருப்பது உறுதியானால் இது பற்றி அச்சம் கொள்ளத் தேவையில்லை. இதனை Renal Glycosuria என்று அழைப்பார்கள்.

இதற்கு எதுவித சிகிச்சையும் அவசிய மில்லை. இது பிறக்கும்போதே வந்த ஒரு சிறுகோளாறு. உங்களது சிறுநீரகம், தான் வடிகட்டி அனுப்பும் சிறுநீரிலிருந்து சர்க்கரைச் சத்தை திரும்ப உறிஞ்சி பெற இயலாத நிலையில் சிறுநீரில் சர்க்கரைச் சத்து காணப்படுகிறது.

இதனால் உங்கள் சக்தி குறையலாம். அதனை ஈடுசெய்ய கொஞ்சம் அதிகமாக உணவை உட்கொண்டாலே போதுமானது.

***

கேள்வி: பெண். வயது 23. திருமண மாகவில்லை. மேல்படிப்பு படித்து கொண் டிருக்கின்றேன். எனக்கு அடிக்கடி கண் இமைகள் துடிக்கின்றன. இதனால் அப்படி யான சமயங்களில் தொந்தரவாக இருக்கின்றது. ஆலோசனை கேட்ட சில டாக்டர்கள் விட்டமின் B12 ஊசிமருந்து எடுக்கச் சொன்னார்கள். ஒரு சிலர் தொடர்ந்து B Complex மாத்திரைகளை உபயோகிக்கச் சொன்னார்கன். துடிப்பு சிலவேளைகளில் இருக்கின்றது; சிலவேளைகளில் இல்லை. இது நரம்பு நோயா? பரிகாரம் தருக.

பதில்: Twitching of Eyelids என்பது கண் இமைகளுக்கு செல்லும் நரம்பு அதிகளவில் தூண்டப்படுவதால் ஏற்படும் கோளாறு. இதற்கு பல காரணங்கள் கூறப் படுகின்றன. அநேக சந்தர்ப்பங்களில் - காரணம் எதும் இல்லாமல் ஏற்படும் கோளாறுகளில் இதுவும் ஒன்றாகக் கருதப் படுகிறது. விட்டமின் குறைபாடு காரண மாக முக்கியமாக நரம்புகளுக்கேற்ற B, B Complex விட்டமின் குறைபாடுகளால் இந்த நரம்புத் தளர்ச்சி ஏற்படலாம். ஒரு சிலருக்கு இந்த விட்டமின்களால் குணம் காணும் சந்தர்ப்பங்கள் உண்டு.

தொடர்ந்து தொலைக்காட்சி பார்ப்பவர் களுக்கு - அதுவும் மிக அருகாமையி லிருந்து பார்ப்பவர்களுக்கு இந்த கண் இமை துடிப்பு ஏற்படுவதுண்டு. கணினி யில் நிறைய வேலை பார்ப்பவர்களுக்கும் இந்தக் கோளாறு ஏற்படுவதுண்டு. இதற்கு காரணம் எமது கண்கள் வறண்டு போவதே. இதனைத் தடுக்க கண் இமைகளை அடிக்கடி இமைத்துக் கொண்டிருப்பது அவசியம். மேற்கூறப் பட்ட செயற்பாடுகளின்போது - கண் இமைகள் அடிக்கடி மூடப்படுவதி ல்லை. இதனால் கண் இமைகளின் சிறு தசைகள் பலவீனமடைந்து தளர்ச்சி பெற்று நரம்பு களும் தளர்ச்சி பெறுவதால் இந்தக் கோளாறு ஏற்படுகின்றது. இந்த நிலையில் வெறு மனே B மாத்திரைகளை உட்கொள் வதால் பிரயோசனம் இராது. கண்களுக்கு ஓய்வு கொடுத்து பணிபுரிவது இங்கு அவசியம். ஒரு சிலருக்கு கண் இமை களின் நரம்பு கள் - சுழற்சியுறுவதாலும் - அந்த நரம்பு கள் வருகின்ற வழிகளில் - கட்டிகள், வளர்ச்சிகள் ஏதாவது அழுத்து வதாலும் இப்படி ஏற்படலாம். எனவே, நரம்பியல் நிபுணர் ஒருவரின் ஆலோசனை பெற்று - காரணம் கண்டறிந்து சிகிச்சை பெறுவது விரும்பத்தக்கது.

***

இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்

நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் சிறந்த மருத்துவ எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
பதில் தருகிறார்.

இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# நவக்கிரி அருள்மிகு ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார் ஆலயம்

# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் - 30.03.2009

## மஹோற்சவ குருவின் ஆசியுரை



எல்லா வழிபாட்டிற்கும் முதல்வராக இருப்பவர் விநாயகர். விக்கினங்கள் யாவும் களைந்து வெற்றியை நல்கும் விக்னேஸ்வரப்பெருமானின் வழிபாடு இலகுவானது. அன்பர்களுக்கு எளிதில் இரங்கி வரம் தருபவர் அவர்.

புத்தூர்-நவக்கிரிப் பதியில் அவர் மாணிக்கப்பிள்ளையாராக வீற்றிருந்து அருள்கின்றார். சூரியபகவானுக்குரிய இரத்தினம் மாணிக்கம். நவரத்தினங்களில் நடுநாயகமாக அமையும் செம்மை மிகுந்த இரத்தினமாகிய மாணிக்கத்தை தன் பெயராகக் கொண்டி லங்கும் மாணிக்கப் பிள்ளையார், என்றும் அருள் ஒளி வீசிக் கொண்டிருக்கிறார்.


நவக்கிரிப் பதியிலே வற்றாத நீரூற்றின் அருகில் இருக்கும் விநாயகர் வற்றாத அருட்பெருக்கை உடையவர். வேண்டும் வரம் யாவும் அருள்பவர். அவரது மஹோற்சவப் பெருவிழா நடைபெறுகிறது. இன்று அவர் தேரேறிவரும் திருநாள்.

அடியவர்கள் யாவரும் 'அரோகரா' கோஷத்துடன் வடம் பிடித்திழுக்க அழகிய தேரில் அமர்ந்து அவர் வீதிவலம் வரும் காட்சி அற்புதமானது.

துன்பங்கள், துயரங்கள், பகைகளும் சூழ்ந்து நம்மை வருத்தும்போது அவற்றைக் கடிந்து அகற்றி வெற்றியைத் தந்து இன்பம் நல்கும்படி அவரை வேண்டிப் பணிந்து போற்றி மகிழ்வோமாக.

''விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்''

சிவஸ்ரீ ந.யோகானந்தேஸ்வரக் குருக்கள்,
மஹோற்சவகுரு.



### வற்றாத நீரூற்றின் அருகிருந்து அருள் சுரக்கும் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார்

வலி.கிழக்கு புத்தூர் மத்தியில் நவக்கிரி என்னும் பகுதியில் இருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் நீண்ட வரலாற்றுப் பெருமையுடையது.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த கடைசி அரசனாக விளங்கிய சங்கிலி அரசன் காலத்தில் சோழமண்டலத் திலிருந்து வந்து யாழ்.குடாநாட்டில் குடியேறிய மூதாதையர்களால் வழிபாடு செய்யப்பட்ட ஆலயம் இதுவாகும்.

புராதன மன்னர் காலத்தில் நில அறை இங்கிருந்து கீரிமலை வரை பயன்படுத்தப் பட்டது. இக்காரணத்தினால் நில அறை நிலாவரை என வழங்கப்பட்டது என சான்றுகள் பகர்கின்றன. மேலும் இதே இடத்தில் இராமபிரான் தனது பரிவாரங்களுடன் இலங்கை வந்து தங்கித் திரும்பிச் செல்லும் வழியில் தண்ணீர்த் தாகம் ஏற்பட்டபோது தண்ணீர் இல்லாது பரிவாரங்கள் அவதிப்படவே இராமபிரான் தனது வில்லினால் ஊன்றியபோது தண்ணீர் பீறிட்டு வந்து தாகம் தீர்த்தது. இந்நீரூற்று வற்றாத நீர்ப்பெருக்காக இன்றும் உள்ளது. இதன் ஆழம் அறிய முடியாத ஒன்றாக உள்ளது.

நவக்கிரி கிராமத்தில் அமைந்திருக்கும் இக்கேணியின் சுற்றுப் புறத்தின் மத்தியில் நவசைலேஸ்வராச்சிவன் ஆலயமும் உள்ளது.

இக்காலகட்டத்தில் எம்மூதாதை யர்களால் சிறிய கொட்டில் அமைத்து கல்லில் மாணிக்கக்கல் ஒளிவீச அக்கல்லை வைத்துப் பாலூற்றித் தினமும் வணங்கி வந்தார்கள் என்றும் தொடர்ந்து அவ்வூர் மக்கள் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாரை வைத்து வழிபாடு செய்து வந்தார்கள் எனவும் கூறுவர்.

ஊர்மக்களின் ஊக்கத்தினாலும் விடாமுயற்சியினாலும் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாருக்குக் கோயில் அமைத்து புனருத்தாரணம் செய்து 1968 ஆம் ஆண்டு பங்குனி மாத ரோகினி நட்சத்திரத்தன்று கும்பாபிஷேகம் நடத்தப் பட்டது.

1967 ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டு வரை ஊர் மக்களால் அலங்கார உற்சவம் பத்து நாள்களும் நடத்தப்பட்டுப் பதினோராம் நாள் பங்குனிமாத ரோகினி நட்சத்திரத் திரத்தில் தீர்த்தோற்சவமும் நடத்தப்பட்டது.

பின்னர் 1995 ஆம் ஆண்டு கொடித்தம்பம் நிறுவப்பட்டுக் கொடியேற்றிக் கட்டுத்தேர் அமைத்து பங்குனி மாத ரோகினி நட்சத்திரத்துக்கு முதல் நாள் கட்டுத்தேரில் ஆரோகித்து மக்களுக்கு அருள்பாலிக்க வீதியுலாச் செய்தார்கள்.

2003 ஆம் ஆண்டு ஊர் மக்களாலும் வெளிநாட்டு அன்பர்களினாலும் சித்திரத்தேர் அமைப்பதற்குத் தேர்த்திருப்பணிச்சபை அமைக்க முயற்சி மேற்கொள் ளப்பட்டது. திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பவல்லுநர் சீவரத்தினம் ஜெயப்பிரகாஸ் குழுவினரால் சித்திரத்தேர் அமைக்கப் பட்டது.

2004 ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் வெள்ளோட்டம் நடத்தப்பட்டு தேர்த் திருவிழா அன்று இழுக்கப்பட்டது. ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் புதிய சித்திரத் தேரில் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார்.

இன்றைய தேர் உற்சவம் ஆறாம் ஆண்டு நிறைவைக் காட்டுகிறது. எல்லாம் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையாரின் திருவருளே.

பரிபாலன சபையினர்,
நவக்கிரி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்.

## தலைவர் ஆசியுரை



பிரணவத்தின் வடிவாகவும், பொருளாகவும் விளங்கும் நவக்கிரி அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் இன்று சித்திரத் தேரில் ஆறாவது ஆண்டாகப் பவனி வந்து மெய்யடி யார்களுக்கு அருள் பாலிக் கின்றார்.

நவக்கிரிப் பதியினிலே வற்றாத நீரூற்றின் அருகில் இருக்கும் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் அருள்பெருக்கை உடையவர். வேண்டும் வரம் யாவும் அருளுவார். அவரது விசித்திரமான சித்திரவடிவத் தேரில் பிள்ளையார் பவனி வருவது கண் கொள்ளாக் காட்சியா கும். தேரோட்டத்தில் வடம்பிடிப்போர் மாணிக் கப்பிள்ளையா ரின் ஆனந்தபுவனம் எனப்படும் கைலாய பூமியில் ஏற்கனவே இடம்பிடித்தோர் ஆவர்.

எனவே ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் அடியார்கள் தம் வாழ்வில் சீரும் சிறப்பும் பேறும் பெருவாழ்வும் பெறுவதோடு நாட்டில் அமைதியும் சமாதானமும் பெறுவார்கள் என வாழ்த்தி நிறைவு பெறுகின்றேன்.

எஸ்.சுப்பிரமணியம்
தலைவர்
ஆலய பரிபாலன சபை
நவக்கிரி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோயில்


### விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

**நந்தன் பல்பொருள் வாணிபம்**
சகல விதமான பொருள்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
சுன்னாகம் வீதி, நவக்கிரி, நிலாவரை.

**சிவன் வெதுப்பகம், சிவன் சிற்றுண்டிச்சாலை**
சுவையான உணவு வகைகள், சிற்றுண்டிகள் குறித்த நேரகாலத்துக்கு ஒடருக்குச் செய்து தரப்படும்.
சுன்னாகம் வீதி,நவக்கிரி,நிலாவரை.

**குட்டி பல்பொருள் வாணிபம்**
சகல விதமான பொருள்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நவக்கிரி,புத்தூர்.

**குமார் அரைக்கும் ஆலை**
நெல்குற்றுதல், மா அரைத்தல், மிளகாய்த்தூள் அரைத்தல் துப்புரவாகச் செய்து கொடுக்கப்படும்.
சுன்னாகம் வீதி, நவக்கிரி,புத்தூர்.

**ரவி விவசாயக் களஞ்சியம்**
உரவகைகள், கிருமிநாசினி வகைகள், விதைகள் நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
நவக்கிரி மேற்கு,புத்தூர்.

**கந்தையா கல் உடைக்கும் ஆலை**
நவக்கிரி, புத்தூர். குட்டியப்புலம், வசாவிளான்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ் பல்பொருள் வாணிபம்**
சகல விதமான பொருள்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நவக்கிரி,புத்தூர்.

**மாஸ்ரர் ஸ்ரோர்ஸ் விவசாயக்களஞ்சியம்**
உரவகைகள், கிருமிநாசினிகள், விதைகள் நியாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
இராச வீதி,கோப்பாய்.

**சூர்யா மருந்தகம்**
மருந்து வகைகளை நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
பஸ்நிலையம் முன்பாக,அச்சுவேலி.

### விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

**எல்லாளன் விளையாட்டுக் கழகம்**
நவக்கிரி, புத்தூர்.

**சுதாயினி ரேடர்ஸ் பல்பொருள் வாணிபம்**
சகல விதமான பொருள்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நவக்கிரி,புத்தூர்.

**பொன்னம்பலம் பல்பொருள் வாணிபம்**
சகல விதமான பொருள்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நவக்கிரி,புத்தூர்.

**மிதூஸ் கிறீம் ஹவுஸ்**
பல்சுவை பழவகைகள், கிறீம் வகைகள் ஒடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
நவக்கிரி, புத்தூர்.

**ராஜன் சேவிஸ் ஸ்ரேசன்**
மோட்டார் சைக்கிள் திருத்துநரும் சேவிஸ் செய்து கொடுப்பவரும்
நவக்கிரி,புத்தூர்.

**குமணன் ஸ்ரோர்ஸ் பல்பொருள் வாணிபம்**
சகல விதமான பொருள்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நவக்கிரி,புத்தூர்.

**ஞானம் களஞ்சியம்**
சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்.
பல்பொருள் வாணிபம்.
சுன்னாகம் வீதி,புத்தூர், நிலாவரை.

**சாந்தா பல்பொருள் வாணிபம்**
சகல விதமான பொருள்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
சுன்னாகம் வீதி,புத்தூர்.

**நீலகிரி உணவகம்**
சுவையான சிற்றுண்டிகள், ஒடருக்குச் செய்து தரப்படும்.
நிலாவரைச்சந்தி,நவக்கிரி.

**டிலெக்சன் உணவகம்**
சுவையான சிற்றுண்டிகள் ஒடருக்குச் செய்து தரப்படும்.
நிலாவரை,புத்தூர்.

**ராம் C.D வேல்ட் - எலக்ரோனிக்**
ஓடியோ, வீடியோ சீடி, அன்ரனா வகைகள் மற்றும் ரீ.வி, ரேடியோ உதிரிப்பாக விற்பனையும், இலத்திரனியல் பொருள்கள் திருத்தலும்.
220, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

**கஜமுகன் ஐஸ்கிறீம் ஹவுஸ்**
பல்சுவை பழவகைகள், கிறீம் வகைகள் ஒடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
நவக்கிரி, புத்தூர்.

**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
சகலவிதமான புடைவை வகைகள்; நியாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
இல: 5[illegible]

**ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் இந்து இளைஞர் மன்றம்**
நவக்கிரி,புத்தூர்.

**அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம் (வ/து)**
[illegible]
பருத்தித்துறை வீதி,அச்சுவேலி.தொ.பே 021 222 2382


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்

30-03-2009 முதல்
05-04-2009 வரை

பொ.சந்திரலிங்கம்

## மேஷம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியசித்தியுண்டு, பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்யார். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

## இடபம்

கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பாற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலேங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

## மிதுனம்

மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பாற்றக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளில் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.

## கடகம்

புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை நட்பாகலாம். முதலீடுகயில் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

## சிம்மம்

மகம், பூரம், உத்தரம் 1

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். புதிய முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக எண்ணம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

## கன்னி

உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய்நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

## துலாம்

சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## விருச்சிகம்

விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு காலதாமதமாகலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

## மகரம்

உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

## கும்பம்

அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## மீனம்

பூரட்டாதி 4. உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையவாய்ப்புண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக எண்ணம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

## UNIVERSITY OF JAFFNA

### Tender for Supply of Uniform Materials - 2009

Sealed Tenders are invited from Reputed Suppliers for the following items.

| Serial No | Item | Qty |
|---|---|---|
| 1. | White Polyester Shirting 80 / 20. 36"<br>6.75 m - 129 Nos. = 870.75<br>9.00 m - 1 No. = 9.00<br>15.08 m - 1 No. = 15.08<br>2.73 m - 4 Nos. = 10.92<br>10.39 m - 12 Nos. = 124.68<br>1030.43 | 1030.43 m |
| 2. | Black Skysuplin / Black Polyester Suiting 58"/60"<br>3.60 m - 145 Nos. = 522.00<br>4.80 m - 1 No. = 4.80<br>526.80 | 526.80 m |
| 3. | Light Blue Polyester Shirting 36"<br>3.65 m - 1 No. = 3.65<br>6.75 m - 50 Nos. = 337.50<br>341.15 | 341.15m |
| 4. | Grey Skysuplin / Grey Polyester Suiting 58"/60"<br>9.60 m - 47 Nos. = 451.20 | 451.20m |
| 5. | Dark Blue Skysuplin / Dark Blue Polyester Suiting 58"/60"<br>3.60 m - 46 Nos. = 165.60<br>18.51 m - 1 No = 18.51<br>184.11 | 184.11m |
| 6. | White Skysuplin White Tazoor Suiting 58"/60"<br>2.29 m - 43 Nos. = 98.47<br>4.58 m - 58 Nos. = 265.64<br>364.11 | 346.11m |
| 7. | Cotton Saree / Polyester Saree 5.4 m each<br>Blue - 12 Nos. | 12 Nos. |
| 8. | Socks – Black / Brown (Cotton / Nylon) | 94 Pairs |

All Tenderers are requsted to pay a non refundable Tender fee of Rs.1500.00 and refundable deposit of Rs.5,000.00 by Money Order drawn infavour of the Bursan, University of Jaffna, payable at the Jaffna post office or in case at the shroff counter of the University of Jaffna. The money order/ cash receipt to be attached to the Tenders. The University may at its discretion either to increase or to decrease the quantity of items to be purchased.If any special discount is allowed to the University, that should be indicated in the Tender. the successful supplier should be prepared to deliver these items at the University of Jaffna and to extend one month credit facility. After confirmation of the order supply should be completed within three weeks time.

Tenders should be sent under registered cover, along with the sample of each variety in 6" x 6" size to the bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna. Top left hand corner of the envelope to be marked "Tender for Uniform material" with No.: **UJ/F/SK/T/01/09.** Tenders should be sent on or before 27.04.2009 at 02.00 pm. Tenders will be opened on same day at 02.30 pm. (TP.NO. 021 2222644)

Registrar
**University of Jaffna.**

## கண் சிகிச்சைக்கு உதவிகள்

வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கான சேவையாக, கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் கண்சத்திர சிகிச்சை, லென்ஸ் பொருத்துதல் என்பவற்றை மேற்கொண்டு வருகிறது.

இதுவரை நூற்றுக்கணக்கானோர் பயனடைந்துள்ளனர். இம்மாதம் இருவர் அவ்வாறு சத்திர சிகிச்சை லென்ஸ் வைத்தல் ஆகிய சிகிச்சைகளைப் பெற்றுள்ளனர்.

அளவெட்டி, மல்லாகம் பகுதியைச் சேர்ந்த இருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான மேற்படி பொருள்களை நிறுவனம் வழங்கியுள்ளது.

தகுந்த ஆதாரங்களுடனும் தக்க சிபார்சுகளுடனும் உதவி கோரி விண்ணப்பிப்பவர்களுக்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் தொடர்ந்தும் உதவி வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (203-160)

## தவறிவிட்டது

நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்னும் முகவரியைச் சேர்ந்த குமாரசாமி ஐயர் தியாகராஜ சர்மா (மணி ஐயா) என்பவரது தேசிய அ. அட்டை (430570650V), விசேட அ.அட்டை என்பன நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயத்திற்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயத்தில் ஒப்படைத்துதவவும்

## பணிப்பெண் தேவை

2பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டில் தங்கியிருந்து சகல வேலைகளையும் செய்யக் கூடிய பெண் தேவை. வேலையாள் தன்னுடைய சகல விவரங்களையும், தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி எண்ணையும், எதிர்பார்க்கும் சம்பள விபரங்களையும் உள்ளடக்கி விண்ணப்பிக்கவும். ஆதரவற்றவர்கள் விரும்பத்தக்கது. 3 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

*விளம்பர இல. 3186*
*மே/பா உதயன், யாழ்ப்பாணம்.*

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

ஜேர்மனியில் வசிக்கும் ஐங்கரன் - ஜனார்த்தனி தம்பதியரின் செல்வப் புதல்வன் **பிரதாபன்** தனது 1 ஆவது பிறந்தநாளை இன்று (30.03.2009) திங்கட்கிழமை ஜேர்மனியில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார்,தாத்தாமார், பாட்டிமார், பூட்டன்மார், பூட்டிமார், மாமாமார், அத்தைமார், அண்ணன்மார், அக்காமார், தம்பிமார், தங்கச்சிமார், மச்சான்மார், மச்சாள்மார் ஆகியோர் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.




*தகவல்:*
சிவபாலமூர்த்தி (தாத்தா)
திரு.திருமதி சசிதரன்
பாலைக்குளம்,
திருநெல்வேலி.

(83957)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடு: தி.மு.கவுக்கு 21; காங்கிரஸுக்கு 16

## விடுதலைச் சிறுத்தைகள் 2; முஸ்லீம் லீக் 1



தங்கபாலு (காங்.), திருமாவளவன் (வி. சிறுத்தைகள்), காதர் மொய்தீன் (முஸ்லிம் லீக்) ஆகியோருடன் கையெழுத்தான மக்களவைத் தொகுதி பங்கீடு உடன்பாடு குறித்து சென்னை அறிவாலயத்தில் நேற்றுமுன்தினம் மகிழ்ச்சியுடன் அறிவிக்கும் முதல்வர் கருணாநிதியுடன், அகில இந்திய காங். பொதுச் செயலர் குலாம்நபி ஆசாத். அருகில் அன்பழகன், மு.க.ஸ்டாலின், தயாநிதி மாறன்.

சென்னை, மார்ச் 30

தமிழகத்தில் தி.மு.க. - காங்கிரஸ் தொகுதி பங்கீடு தொடர்பான பேச்சில் நேற்றுமுன்தினம் இரவு உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி, தி.மு.க. 21, காங்கிரஸ் 16 தொகுதிகளில் போட்டியிடுகின்றன. விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு 2, முஸ்லீம் லீக் கட்சிக்கு ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது என தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்தார்.

தமிழகத்தில் தி.மு.கவுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சு நடத்த, அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளரும், தமிழகக் காங்கிரஸ் பொறுப்பாளருமான குலாம்நபி ஆசாத், டில்லியில் இருந்து நேற்றுமுன்திம் மாலை சென்னை வந்தார். இரவு 8 மணிக்கு அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதியைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

தொகுதிப் பங்கீட்டுப் பேச்சில் உடன்பாடு ஏற்பட்ட பின், கருணாநிதி மற்றும் குலாம்நபி ஆசாத் சேர்ந்து பத்திரிகையாளர்களை சந்தித்தனர். அப்போது, கருணாநிதி கூறியவை வருமாறு -

2009 மக்களவை தேர்தலில், தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சி 16 தொகுதிகளில் போட்டியிடுவதற்கான ஒப்பந்தத்தில் தி.மு.க. தலைவரும், தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவும் கையெழுத்திட்டனர். தி.மு.கவிடம் உள்ள 24 தொகுதிகளில் 2 தொகுதிகள் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கும், ஒரு தொகுதி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மனித நேய மக்கள் கட்சி பொதுச் செயலாளர் வெளிநாடு சென்றுள்ளமையால் தொகுதி முடிவு செய்யப்படவில்லை.

காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்ட 16 தொகுதிகளில், புதுச்சேரியும் அடங்கும். இரண்டொரு நாளில் யார் யாருக்கு எந்தத் தொகுதிகள் என்று அறிவிக்கப்படும் - என்றார்.

குலாம்நபி ஆசாத் கூறுகையில், காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட 16 தொகுதி திருப்தி அளிக்கிறது. தி.மு.க. தலைவர் கருணாநிதியின் வழிகாட்டுதல்படி, 40 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம். பாட்டாளி மக்கள் கட்சி எங்கள் கூட்டணியை விட்டு போனது துரதிருஷ்டவசமானது - என்றார்.

# ஜெயலலிதா - ராமதாஸ் இடையே ஈழ விடயத்தில் ஒற்றுமையில்லை

## கருணாநிதி குற்றச்சாட்டு



சென்னை, மார்ச் 30

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் ஆகியோர் இடையே ஒருமித்த கருத்து இல்லை - என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்

இதுகுறித்து அவர் சனிக்கிழமை வெளியிட்ட கேள்வி - பதில் அறிக்கையின் விவரம் வருமாறு -

2006ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ம.க. போட்டியிட்ட இடங்களில் திட்டமிட்டு நான் அவர்களைத் தோற்கடித்தேன் என அக் கட்சி பொதுக்குழுவில் ராமதாஸ் கூறியுள்ளார். தி.மு.கவை விட்டு விலகும்போது எங்களையும், அ.தி.மு.க.வை விட்டு விலகும்போது அவர்களையும் தாக்கிப் பேசுவது ராமதாஸின் வாடிக்கை

போயஸ் தோட்டத்துக்கு பா.ம.க.வைத் தள்ளிவிட்டது தி.மு.கதான் என ராமதாஸ் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

ஜெயலலிதாவின் சூழ்ச்சி, நயவஞ்சக நடவடிக்கைகளை தாங்கிக் கொண்டு, சுயமரியாதை, தன்மானம் கொண்ட பா.ம.க., அ.தி.மு.க. கூட்டணியில் தொடர்ந்து நீடிப்பது சாத்தியப்படாது என்பதால், அந்தக் கூட்டணியில் இருந்து விலகினோம் என 2001இல் பா.ம.க. தெரிவித்தது.

இப்போது ஜெயலலிதாவின் சூழ்ச்சி, நயவஞ்சக நடவடிக்கைகளைத் தாங்கிக்கொள்ளலாம் என நினைத்திருப்பார்கள்போல் உள்ளது.

இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு எந்தளவிற்கு செயற்பட்டது என்பதை அமைச்சராக இருந்த ராமதாஸின் மகன் அன்புமணி நன்றாக உணர்வார். சில நாள்களுக்கு முன்புகூட இலங்கைப் பிரச்சினை பற்றிய பல செய்திகளை பிரதமர் எனக்குக் கடிதம் மூலம் எழுதியுள்ளார். எனவே மத்திய அரசை இந்த அளவுக்கு குற்றஞ்சாட்டக் கூடாது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அ.தி.மு.க., பா.ம.க. இடையே ஒருமித்த கருத்துள்ளது என ராமதாஸ் கூறியுள்ளார். தமிழ் ஈழம் வேண்டும் என்பது ராமதாஸின் கருத்து. தனி மாகாணம் அமைய வேண்டும் என்பது ஜெயலலிதாவின் கருத்து. பிரபாகரனை கைது செய்து தமிழகத்திற்கு அழைத்து வர வேண்டும் என ஜெயலலிதா தீர்மானம் நிறைவேற்றி னார். பிரபாகரனை ஆதரிக்க வேண்டும் என்பது ராமதாஸின் கருத்து. மஹிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளைத்தான் எதிர்த்துப் போரிடுகிறார், இலங்கைத் தமிழர்களை அல்ல என கடந்த மாதம் அறிக்கை விட்டவர் ஜெயலலிதா.

இப்படியிருக்க, எவ்வாறு இருவரின் கருத்தும் ஒருமித்த கருத்தாக இருக்க முடியும்? - என்றுள்ளது.

# ஈழத் தமிழருக்காக தி.மு.க. ஆட்சி ஒருபோதும் கலைக்கப்படவில்லை

## கருணாநிதி கூறுவதில் உண்மையில்லை என்கிறார் ராமதாஸ்



சென்னை, மார்ச்30

ஈழத் தமிழர்களுக்காக இரண்டு முறை தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது என முதல்வர் கருணாநிதி கூறுவதில் உண்மையில்லை - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு -

1975ஆம் ஆண்டு நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது. நெருக்கடி நிலையை எதிர்த்து தி.மு.க. செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனால் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி கோபமடைந்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஒரு விவாதத்தின்போது, ''இந்தியாவின் கட்டுப்பாடற்ற தீவாகத் தமிழகம் இருக்கிறது என அறிவிக்கும் அளவுக்கு தி.மு.க. ஆட்சி உள்ளது'' என இந்திரா காந்தி குற்றஞ்சாட்டினார். அதற்கு மறுநாள் 1977, ஜனவரி 31இல் தி.மு.க ஆட்சி கலைக்கப்பட்டது.

1972இல் தி.மு.க.விலிருந்து பிரிந்து அ.தி.மு.கவைத் தொடங்கிய எம்.ஜி.ஆர். தி.மு.க. அமைச்சரவை மீது 54 ஊழல் முறைப்பாடுகளைக் கொண்ட பட்டியலை அளித்தார்.

அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஆட்சி கலைக்கப்பட்டது. அப்போது இலங்கையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்படவே இல்லை.

ஆனால் அதற்குப் பின்னர் நெருக்கடி நிலையைக் கொண்டுவந்த அதே காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க. கூட்டணி அமைத்தது. அக் கூட்டணி தமிழகத்தில் 37 மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெற்றது.

கருணாநிதி அளித்த நிர்பந்தம் காரணமாக 1980ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.தி.மு.க. அரசை, மத்திய அரசு கலைத்தது.

1983ஆம் ஆண்டில்தான் இலங்கை இனப் பிரச்சினை தலைதூக்கத் தொடங்கியது. அப்போது கருணாநிதி சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை ராஜிநாமாச் செய்தார். ஈழத் தமிழர்களுக்கு உதவிக்கரம் நீட்டிய எம்.ஜி.ஆருக்கு நல்ல பெயர் வந்துவிடக் கூடாது என்ற காழ்ப்புணர்ச்சியால்தான் கருணாநிதி ராஜிநாமாச் செய்தார்.

1991ஆம் ஆண்டு இரண்டாம் முறையாக தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. வி.பி. சிங் தலைமையிலான அமைச்சரவையில் தி.மு.க. இடம்பெற்றிருந்தது. வி.பி.சிங் பதவி இழந்ததைத் தொடர்ந்து சந்திரசேகர் பிரதமரானார்.

வி.பி. சிங்கோடு நெருக்கமாக இருந்தார் என்பதற்காக, ராஜீவ்காந்தி ஆசியோடு தி.மு.க. அரசு அப்போது கலைக்கப்பட்டது. அதற்கு சொல்லப்பட்ட பல காரணங்களில் விடுதலைப் புலிகளை அடக்க கருணாநிதி தவறி விட்டார் என்பதும் ஒன்றாகும்.

ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு அப்போது இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கமல்ல. எனவே, ஆட்சி கலைப்புக்கு மத்திய அரசு கூறியது உண்மையான காரணமல்ல.

1980ஆம் ஆண்டில் இந்திரா காந்தி உதவியோடு எம்.ஜி.ஆர். ஆட்சியை கருணாநிதி கலைத்தார். அதே காரணத்தால்தான் 1991இல் ராஜீவ்காந்தியின் உதவியோடு தி.மு.க. ஆட்சியும் கலைக்கப்பட்டது

எனவே, இரண்டு முறை தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டதற்கும் உள்ளூர் அரசியல், டில்லியில் ஏற்பட்ட அதிகார மாற்றங்கள் மற்றும் அப்போது ஏற்பட்ட கூட்டணி மாற்றங்கள் உள்ளிட்டவையே காரணம்.

ஆகவே, ஈழத் தமிழர்களுக்காக இரண்டு முறை ஆட்சியைப் பலி கொடுத்தவர்கள் நாங்கள் என்று இனி மேலும் கருணாநிதி கூறினால், அதை யாரும் ஏற்கமாட்டார்கள் - என்றுள்ளது.

# பா.ம.கவுக்கு 7 தொகுதிகள் பங்கீடு ஜெ. - ராமதாஸ் கூட்டாக அறிவிப்பு!

சென்னை, மார்ச் 30

வரும் மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் இணைந்து பா.ம.க. போட்டியிடுகிறது. அக்கட்சி 7 தொகுதிகளில் போட்டியிடும் என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் ஆகியோர் கூட்டாக நேற்றுமுன்தினம் அறிவித்தனர்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் பங்கேற்றிருந்த பா.ம.க., இப்போதைய தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர முடிவு செய்தது. அக்கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடத்தி இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்நிலையில், பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ், தலைவர் ஜி.கே. மணி ஆகியோர், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை சென்னையிலுள்ள அவரது இல்லத்தில் சனிக்கிழமை சந்தித்துப் பேசினர்.

அச்சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் ஜெயலலிதா கூறியவை வருமாறு -

2009 மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. - பா.ம.க. இடையே கூட்டணி ஏற்பட்டுள்ளது. இது மகிழ்ச்சியளிக்கிறது. பா.ம.க. நிறுவுநர் ராமதாஸும், நானும் நடத்திய பேச்சில் அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க.வுக்கு 7 மக்களவைத் தொகுதிகள் அளிப்பது என உடன்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும் 2010ஆம் ஆண்டில் நடைபெறும் மாநிலங்களவை தேர்தலின்போது பா.ம.க.வுக்கு ஓர் இடம் ஒதுக்கப்படும்.

அ.தி.மு.க. - பா.ம.க. இடையே 8 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கூட்டணி ஏற்பட்டுள்ளது - என்றார்.

கூட்டணி குறித்து ராமதாஸ் கூறும்போது, எங்கள் கூட்டணி புதுவை உட்பட 40 தொகுதிகளிலும் சாதாரண வெற்றியாக அல்லாமல், மிகப் பெரிய வெற்றி பெறும் - என்றார்.

# ஓர் இனம் அழிந்த பின்னரா முடிவெடுப்பது? - விஜயகாந்த்

இலங்கையில் போரை நிறுத்த பிரதமர் இப்போதுதான் கடிதம் எழுதுகிறார். ஓர் இனம் அழிந்த பிறகா முடிவு எடுப்பது?

- இவ்வாறு தே.மு.தி.க. விஜயகாந்த் கேள்வியெழுப்பியுள்ளார்.

நெல்லை மேற்கொண்ட தேர்தல் பிரசாரத்தின்போதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் பேசியவை வருமாறு -

முதன்முறையாக நாடாளுமன்றத் தேர்தலில் தே.மு.தி.க. போட்டியிடுகிறது. இங்கு தே.மு.தி.க. சார்பாக முரசு சின்னத்தில் மைக்கேல் ராயப்பன் போட்டியிடுகிறார். அவருக்கு வாக்களித்து வெற்றி தேடித்தர வேண்டும்.

இலங்கையில் போரை நிறுத்த பிரதமர் இப்போதுதான் கடிதம் எழுதுகிறார். இனம் அழிந்த பிறகா முடிவு எடுப்பது?

அ.தி.மு.க., தி.மு.க. 2 கட்சிகளுமே மாறி மாறி கொள்ளை அடிக்கின்றன. உடல் நலம் இல்லாத போது ஒரு டாக்டரிடம் சரியாகவில்லை என்றால் வேறு டாக்டரிடம் செல்வோம் அல்லவா? அது போல் எங்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள்.

முரசுக்கு வாக்குப் போடுங்கள். உங்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும். நான் பத்து பதினைந்து தொகுதிகளுக்கும், கோடிகளுக்கும் விலை போகவில்லை. மக்களுக்குத் தேவையானதைச் செய்துகொடுக்கத் தனியாக வந்துள்ளேன். நான் உங்களை நம்புகிறேன். நீங்கள் என்னை நம்ப வேண்டும். அப்போதுதான் நீங்கள் முன்னேற முடியும்.

அவர்கள் 3 மாணவிகளை உயிரோடு கொளுத்தினார்கள். தேர்தல் அதிகாரிகளை 2 பேருமே தாக்கினார்கள். இருவரும் கூட்டுக் கொள்ளை அடிக்கிறார்கள்.

ஆண்டுக்கு 5 லட்சம் பேருக்கு வேலை வழங்கப்படும் என்றார்கள். 25 ஆயிரம் பேருக்கு மட்டுமே வேலை வழங்கப்பட்டுள்ளது. இரண்டு பேரும் அறிக்கை போர் செய்கிறார்கள். மக்களும், மாணவர்களும் நினைத்தால் எதையும் சாதிக்கலாம். மக்களுக்காக 2 கட்சிகளும் பாடுபடவில்லை. ஒரு கட்சி குடும்ப கட்சி, மற்றொரு கட்சி தோழி கட்சி. ஆனால் மக்களுக்காகப் பாடுபடுவது தே.மு.தி.க.தான். நீங்கள் சிந்தித்து செயற்படுங்கள் - என்றார்.

# சிதம்பரம் தொகுதியில் திருமாவை எதிர்த்து களமிறங்குகிறது பா.ம.க.

சென்னை, மார்ச் 30

சிதம்பரம் தொகுதியில் திருமாவளவனை எதிர்த்து பா.ம.க. போட்டியிடுகிறது. இதனால் ஓரணியில் இருக்க நினைத்தவர்கள் எதிர்த்து களம் காணும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட தமிழ் பாதுகாப்பு இயக்கத்தில் பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸும், திருமாவளவனும் இணைந்திருந்தனர். மொழி உணர்வின் அடிப்படையில் ஒன்றாக இருப்பதாக அவர்கள் தெரிவித்திருந்தனர். ஆனாலும் அப்போதும் அவர்கள் இருவரும் இருவேறு அரசியல் அணிகளில்தான் இருந்தனர்.

அதேபோல இப்போது தொடங்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்திலும் டாக்டர் ராமதாஸும், திருமாவளவனும் இடம் பெற்றுள்ளனர். இது இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்காக ஒன்றிணைந்த இயக்கம்.

இவைகள் மட்டுமே இவர்கள் இருவரும் ஒன்றுசேர்ந்து செயற்படுவதற்குக் காரணமாக வெளி உலகுக்கு தெரிந்தாலும், சில மாவட்டங்களில் இந்த இயக்கங்கள் சார்ந்த இரு சமூகத்தினர் இடையே நடந்துவந்த மோதல்களும், இவர்கள் இணைந்து செயற்படத் தொடங்கிய பின்னர் காணாமல் போயின. இது இந்த இரு சமூகத்தினரிடையே ஒரு ஒற்றுமையை ஏற்படுத்துவதாக அமைந்தது.

இந்த நிலையில் கடந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்ட பா.ம.க. அந்த அணியில் இருந்து விலகி அ.தி.மு.க. அணியில் இணைந்துள்ளது.

ஓரணியில் இருக்க நினைத்த இரு கட்சியினரும் அணி மாறினாலும் அவர்கள் தேர்தல் களத்தில் நேருக்கு நேர் சந்திக்கும் சூழ்நிலை இப்போது உருவாகியிருக்கிறது. சிதம்பரம் தொகுதியில் திருமாவளவனை எதிர்த்து பா.ம.க. போட்டியிடுகிறது.

## அமெரிக்காவில் சூர்யாவின் 'அயன்' படத்திற்கு போஸ்டர்

சென்னை, மார்ச் 30

முதன்முறையாக அமெரிக்க ரயில் நிலையத்தில் சூரியா நடித்த 'அயன்' பட போஸ்டர் ஒட்டப்பட்டுள்ளது.

இதுபற்றி பட இயக்குநர் கே.வி.ஆனந்த் கூறியவை வருமாறு -

இதுவரை பார்த்த இறுக்கமான முகத்துடன் இல்லாமல் ஜாலியான, இளைமையான, குதூகலமான சூர்யாவை இந்தப் படத்தில் பார்க்கலாம். பல வேடங்களில் தோன்றியுள்ளார். யதார்த்தமான வாழ்க்கையோடு சம்பந்தப்படாத சூப்பர் மேன்களாகவே பெரும்பாலும் ஹீரோக்கள் தோன்றுவார்கள். அந்த அந்நியத்தனம் இதில் இருக்காது. நம்ம வீட்டு பையன் - பக்கத்து வீட்டு பையன் ஒருவன் சாதனைகள் செய்தால் எப்படிப் பார்ப்போமோ அதுபோன்ற உணர்வுடன் சூர்யாவை பார்க்கலாம்.

அமெரிக்காவில் 'அயன்' படத்துக்கு ஒரு சிறப்பு கிடைத்திருக்கிறது. நியூயோர்க்கில் உள்ள நியூஜெர்ஸி மெட்ரோ ரயில் நிலையத்தில் சூர்யாவின் தோற்றத்துடன் 'அயன்' பட போஸ்டர் ஒட்டப்பட்டிருக்கிறது. பார்வையாளர்களின் கவனத்தை அது ஈர்த்துள்ளது. அமெரிக்காவில் தமிழ்ப் படம் ஒன்றுக்கு போஸ்டர் ஒட்டப்பட்டுவது இதுதான் முதல் முறை - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரங்கள் வழங்கக் கூடாது என்று அமைச்சர் முரளிதரன் கூறிய கருத்துக்கள் பொருத்தமற்றவை

## மாகாணசபை உறுப்பினர் அறிக்கை

கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரம் வழங்கப்படக்கூடாது என அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் அண்மைக்காலமாக வெளியிட்டு வரும் கருத்துக்கள் தமிழ் பேசும் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என கிழக்கு மாகாணசபை உறுப்பினரான இரா.துரைரட்ணம் கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரட்ணம் அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஊடாகவே தமிழ் மக்களுக்காக மாகாண சபை நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டது. விரும்பியோ விரும்பாமலோ நிர்ப்பந் தம் காரணமாக வடக்கு கிழக்கு பிரிக் கப்பட்டு தனித் தனி மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன.

மாகாணசபைகளுக்குரிய அதிகா ரங்களைப் பெறுவதற்கு சகல மக்கள் பிரதிநிதிகளும், குறிப்பாக அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனும் அயராது உழைக்க வேண்டும்.

நெருக்கடி மிக்க இக் கால கட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் நலன் சார்ந்த அனைத்துக் கட்சிகளும் தங்களுக்குள் இருக்கும் முரண்பாடுகளை மறந்து கூட்டுச் சேர்ந்து அதிகாரப்பர வலுக்கான தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அயராது உழைக்க வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கலுக்குரிய செயற்பாடுகள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக தற்போது பேசப்பட்டு வரும் இவ்வேளையில் 20 வருடங்களுக்கு மேலாகத் தமிழ் பேசும் மக்களுக்காக போராடியவன் என்று தன்னைக் கூறிக் கொள்ளும் அமைச்சர், கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரம் வழங்கப்படக் கூடாது என்று கூறுவது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல.

கிழக்கு மாகாணத்தில் 7 ஆயிரம் மக்களுக்கு மேல் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் விதவைகளாக்கப் பட்டுள்ளனர். 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் தங்களது கல்வியை தொடராமல் இடைநிறுத்தியிருக்கின்றனர். இந்த நிலையில் இப்படியான கருத்துக்கள் எந்த வகையிலும் பொருத்தமானது அல்ல.

30 வருடங்களுக்கு மேலாக ஒட்டு மொத்தமாகத் தமிழ் பேசும் மக்கள் அனைத்தையும் இழந்த இந்நிலையில் அமைச்சரின் இக்கருத்தானது அம் மக்களுக்கு செய்யும் துரோகமாகும். என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (04)

# கொக்குவிலில் இளைஞர் மீது துப்பாக்கிச் சூடு; காயமுற்றவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 30

கொக்குவில் சம்பியன் வீதியில் மாத்தனைக் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் வைத்து நேற்றுக் காலை 9.45 மணியளவில் இளைஞன் ஒருவர் இனந் தெரியாத ஆயுததாரிகளால் சுடப்பட்டார். படுகாயமடைந்த அவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கொக்குவில் மேற்கு, தேவாலய வீதியைச் தேவராஜன் றோகன் (வயது 19) என்பவரே சூட்டுக்கு இலக்கானார்.

இச் சம்பவம் குறித்து கூறப்படுவதாவது:-

கொழும்பில் இருந்து நேற்றுமுன் தினம் யாழ்ப்பாணம் வந்த இவர், சம்பியன் ஒழுங்கையில் உள்ள நண்பர் ஒருவரின் வீட்டுக்கு நேற்றுக் காலை சென்றார்.

அங்கு மோட்டார் சைக்கிளில் சென்ற ஆயுததாரிகள் பிரஸ்தாப நபரை வெளியே அழைத்து கதைத்து விட்டு, சுட்டுவிட்டு தப்பிவிட்டனர்.

தலையில் காயமடைந்த றோகன் யாழ். ஆஸ்பத்திரியில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகிறார். (அ-1-25-78)

# விவசாயிகளிடமிருந்து உருளைக்கிழங்கை கொள்வனவு செய்ய வணிகர்கழகம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச்30

குடாநாட்டில் நல்ல விளைச்சல் கண்டுள்ள உருளைக்கிழங்கை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்து மொத்த விலைக்கு விற்பனை செய்வதற்கு யாழ். வணிகர் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

இம்முறை தரமான, நல்ல விளைச்சல் அடைந்துள்ள உருளைக்கிழங்கை நியாய விலையில் விற்பனை செய்யமுடியாத நிலையில் விவசாயிகள் கஷ்டமடைகின்றனர்.

இதனையடுத்து விவசாயிகளிடம் இருந்து உருளைக்கிழங்கை கொள்வனவு செய்து மொத்த விலைக்கு விற்பனை செய்ய வணிகர் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

மொத்த வியாபாரிகள், உணவக உரிமையாளர்கள், சிற்றுண்டி தயாரிப்பவர் கள் தம்முடன் தொடர்பு கொண்டு மொத்த விலைக்கு கொள்வனவு செய்யலாம் என்று வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு உதவும் வகையில் தெற்கில் இருந்து உருளைக்கிழங்கை எடுத்துவர வேண்டாம் என்று விடுத்த கோரிக்கையை வர்த்தகர்கள் ஏற்று செயற்படுவதற்கு நன்றி தெரிவிப்பதாகவும் வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. (அ-1)

# கஜபாகு படையணி மீது விடுதலைப் புலிகள் நான்கு அலைகளாக வந்து தாக்குதல் நடத்தினர்

## 500 மீற்றர் பின்வாங்கியதாக 'லக்பிம' தகவல்

கொழும்பு, மார்ச் 30

வன்னிக் களமுனையில் கடந்த புதன் கிழமை விடுதலைப் புலிகள் நான்கு அலைகளாக புயலென வந்து 20 ஆம் கஜபாகு படையணியினர் மீது தாக்குதல் நடத்தினர். இதனால் படையினர் 500 மீற்றர் தூரம் பின்வாங்கியிருந்தனர்.

கொழும்பில் இருந்து வெளிவரும் 'லக்பிம. நியூஸ்' வார இதழ் மேற்கண்ட தகவலை வெயிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

சிறிலங்கா படையினரின் 7ஆம் சிங்க ரெஜிமன்ட் மற்றும் 20ஆம் கஜபாகு ரெஜிமண்ட் மீது சுமார் 300 பேர் கொண்ட விடுதலைப்புலிகளின் அணியினர் கடந்த புதன் கிழமை பானு மற்றும் லோரன்ஸ் ஆகியோரின் வழிநடத்தலில் தாக்குதலை நடத்தி யுள்ளனர்.

இத் தாக்குதலையடுத்து சிறிலங்கா படையினரின் 7ஆம் சிங்க ரெஜிமண்ட் தமது நிலைகளில் இருந்து 500 மீற்றர் தூரம் பின்வாங்கியிருந்ததாகவும் இச்சமயத்தில் 58 ஆம் படையணியின் படையதிகாரி பிரிகேடியர் சிவாந்திர சில்வா விடுமுறையில் இருந்ததாகவும் இதனையடுத்து மறுநாள் அவர் களமுனைக்கு திரும்பியதாகவும் மேலும் மேலதிக படையினர் பாதுகாப்பினை பலப்படுத்துவதற்கு அப்பகுதிக்கு நகர்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 20ம் கஜபாகு படையினர் மீதும் நான்கு அலைகளாக விடுதலைப் புலிகள் புயலென தாக்கியதாகவும் இவர்கள் தாங்கிகள் மற்றும் கவச வாகனங்களையும் இலக்கு வைத்து தாக்கியதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

# கல்வியியற்கல்லூரி 2 ஆம் மொழிக் கற்கை நெறி; நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், மார்ச் 30

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு இரண்டாம் மொழி(தமிழ்) பாடநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 8 திகதி யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரியில் இடம் பெறவுள்ளது. நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

பிருந்தா பாலசுப்பிரமணியம் (நல்லூர் தெற்கு), அந்தோனி வின்சலோஸ் தோனி (குருநகர்), சேகர் நிக்வின்ரன் (யாழ்ப்பாணம்), பிரதா மகேஸ்வரன் (கரணவாய் வடக்கு), அருணகிரிநாதன் ஈழவேணி (கொக்குவில்), சிவகுமரன் தவரூபிகா (யாழ்ப்பாணம்), பிரியதர்சினி ராஜேந்திரம் (கோப்பாய் தெற்கு), பவித்திரா தனுஸ் கோடி (கரவெட்டி கிழக்கு), தவராஜா சிந்துஜன் (அச்சுவேலி தெற்கு), கௌதமி விக் னேஸ்வரன் (நல்லூர்), ரட்ணம் ருசிபன் (ஆனைக்கோட்டை), அகல்யா பிரேமஜெகன் (மட்டுவில் வடக்கு), பானுகா தனபாலசிங்கம் (திருநெல்வேலி கிழக்கு), தர்சிகா பரமநாதன் (திருநெல்வேலி கிழக்கு), தர்மபாலன் வினோஜித் (கொக்குவில் கிழக்கு), மயூரா விஜயகாந்தன் (கோப்பாய் தெற்கு), திருநாவுக்கரசு மகேஸ்வரன் (யாழ்ப்பாணம்), சுலேகா வேலாயுதபிள்ளை (உடுவில்), மனோலஜா நாகேஸ்வரன் (ஓட்டுமடம்), நமசிவாயம் நிரோசலா (நல்லூர்), சோபனா மனோகரன் (நீராவியடி), ஜான் நிரோஜினி மரியதாஸ் (இளவாலை), விமலநாதன் விமல்ராஜ் (வட்டுக்கோட்டை), சிபிகா தனபாலசிங்கம் (வேலணை மேற்கு), ஜீவனா கந்தசாமி (வேலணை), மயூரன் ராஜதுரை (கரவெட்டி கிழக்கு), சுபிஸா சர்மப்பிரியதர்சினி (பருத்தித்துறை), மேரி வினோஜனா திவாகராஜ் (யாழ்ப்பாணம்), தனேஸ்ரூபா சிறிதரன் (கொட்டடி).

# மக்களின் பாதுகாப்பை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துள்ள கடிதத்துக்கு ஜனாதிபதி செயலகத்தால் நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) பதிலறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

சிறுபான்மைச் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களை ஜனாதிபதி சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. இச் சந்திப்பில் பல தமிழ் அரசியல் பிரதிநிதிகளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் பங்குபற்றியிருந்தன என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு :-

இறப்புகள், காயங்கள், தமிழ் பொதுமக்கள் சிக்கியுள்ளமை தொடர்பாக, புலிகளின் பொறுப்பு தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதனையும் தெரிவிக்கவில்லை. தமிழ்க் கூட்டமைப்பின் கடிதம் ஊடகங்களில் வெளியிடப்பட்டது. பிரிவினைவாதம், புலிகளின் பயங்கரவாதத்தை புகழும் நடவடிக்கைகள், இலங்கை அரசு அதன் மக்களின் நலன்களுக்கு எதிராக பிரசாரம் செய்யும் இணையத்தளங்கள் உட்பட பல இணையத்தளங்களில் அக்கடிதம் வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளை நிறுத்துமாறு தமிழ்க் கூட்டமைப்பு விடுத்த அழைப்பானது துரதிர்ஷ்டவசமானதாகும். சிறிய நிலப்பகுதிக்குள் சிக்கியிருக்கும் பொதுமக்களை புலிகளின் பிடியிலிருந்து மீட்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள மனிதாபிமான நடவடிக்கையைக் கைவிடுவதாகவும் - கடைசித் தறுவாயிலிருக்கும் பயங்கரவாதத் தலைமைத்துவத்தையும் பாதுகாப்பதான முயற்சியாகவும் அது அமையும்..

### பொதுமக்கள் அபாயத்தில் இருந்தவேளை கூட்டணி ஈடுபாடுகாட்ட வில்லை

மோதல் பகுதியிலிருந்து பொதுமக்களை விடுவிக்குமாறு ஜனாதிபதியும் அரசும் செப்ரெம்பர் முதல் விடுதலைப்புலிகளிடம் கோரிக்கை விடுத்து வந்துள்ளனர். அச்சமயம் தமிழ்க் கூட்டமைப்பு இதில் ஈடுபாடு காட்டவில்லை. விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான சிலர், இலங்கைப் படையினரின் முன்னேற்றத்தைப் புலிகள் தடுத்து விடுவர் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். விடுதலைப்புலிகளின் இடங்களில் தங்கியிருந்த பொதுமக்கள் பெரும் அபாயத்தில் இருந்தனர். அது குறித்து தமிழ்க் கூட்டமைப்பு அமைதியாக இருந்தது.

மோதல் சூனியப் பகுதியில் புலிகள் ஆட்லறியை வைத்து தாக்குதல் நடத்திய போது தமிழ்க் கூட்டமைப்பு ஒரு வார்த்தையேனும் தெரிவிக்கவில்லை.

அரசு ஆயிரத்து 250 மெற்றிக்தொன் உணவு, மருந்துப் பொருள்களை அனுப்பியுள்ளது. அடுத்த சில நாள்களுக்குள் ஆயிரத்து 20 மெற்றிக்தொன் பொருள்களை அனுப்ப உள்ளது. கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு உணவு, மருந்து மற்றும் அத்தியாவசிய மனிதாபிமான விநியோகங்களை அனுப்பிவைப்பதை உறுதிப்படுத்த ஜனாதிபதி தனிப்பட்ட கவனத்தை எடுத்துள்ளார்.

பாதுகாப்பு வலயத்திற்குள் விமான, ஆட்லறி தாக்குதல்களால் தினமும் சராசரியாக 40 - 50 பொதுமக்கள் கொல்லப் படுகின்றனர் எனவும் பல மடங்கானோர் காயமடைகின்றனர் எனவும் தமிழ்க் கூட்டமைப்பு குற்றச்சாட்டுத் தெரிவித்திருந்தது.

### பாதுகாப்பு வலயத்தின் மீது ஆட்லறிகளோ கனரக ஆயுதங்களோ பிரயோகிக்கவில்லை

தற்போதைய மனிதாபிமான நடவடிக்கையில் ஆயுதப் படைகள் அதிகபட்ச கட்டுப்பாட்டுடன் செயற்படுகின்றனர் என கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு அறிவித்துள்ளார்.

பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் இலங்கை ஆயுதப் படைகள் எந்தவொரு ஆட்லறிகளையோ கனரக ஆயுதங்களையோ பிரயோகிக்கவில்லை. விமானப் படையினரும் குண்டுவீச்சு நடத்தவில்லை. ஆயினும் புலிகள் ஹெலிக்கொப்டர்கள் மீது மோதல் சூனியப்பகுதியிலிருந்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளனர். தினமும் 40 - 50 பொதுமக்கள் கொல்லப்படுவது என்பது மிகைப்படுத்தப்பட்டதென்று நாம் நம்புகின்றோம்.

விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்படுவது மற்றும் காயமடையாமல் பொது மக்கள் இறப்புகள் ஏற்படுவதாகச் சொல்லப்படுவது சாத்தியமற்றதொன்றாகும்.

சுயாதீன ஊடகங்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படவிலை என்று தமிழ்க் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது. யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கமுடியாது. அதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியாவிலுள்ள இடம் பெயர்ந்தோர் தங்கியிருக்கும் நிலையங்களுக்கு உள்ளூர், சர்வதேச பத்திரிகையாளர்கள் பல தடவை செல்வதற்கு அரசு அனுசரணை வழங்கியது.

3 இலட்சம் பேர் மோதல் பகுதியில் இருக்கின்றனர் என தமிழ்க் கூட்டமைப்பு கூறியிருக்கிறது. புள்ளிவிவரம் தொடர்பாக மூன்று வித்தியாசமான எண்ணிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டிருப்பதை தமிழ்க் கூட்டமைப்பு ஒத்துக்கொண்டுள்ளது. கடந்த மாதம் 56 ஆயிரம் பேர் வரை வெளி யேறிவிட்டனர். அங்கு பட்டினியால் மரணமடைந்திருப்பதாகக் கூறுவதும் ஏற்றுக்கொள்ளமுடியாததொன்றாகும். அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த பொது மக்கள் போதியளவு உணவ[illegible] தோன்றுகிறது. அங்கு [illegible]ப்பாடு இல்லை என அப் பொதுமக் கள் கூறியுள்ளனர்.

### உணவு மற்றும் மருந்தை அரசு ஆயுதமாகப் பயன்படுத்தவில்லை

இந்த வருடம் மாத்திரம் 3 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் எனவும் 8 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்திருக்கின்றனர் எனவும் தமிழ்க் கூட்டமைப்பு கூறுகிறது. அரசு ஒருபோதும் உணவு, மருந்தை யுத்தத்திற்கான ஆயுதமாகப் பயன்படுத்தவில்லை. ஆயுதக் குழுவொன்றுக்கு உணவு, மருந்து வழங்கும்ஒரே நாடு உலகில் இலங்கை மட்டுமேயாகும்.

மேலும் கொல்லப்படுவோர், காயமடைவோர் தொடர்பான எண்ணிக்கையை எவராலும் உறுதிப்படுத்த முடியாது. புலிகள் பொதுமக்கள் மத்தியில் சீருடையின்றி கலந்திருக்கும்போது இதனைக் கூற முடியாது. அத்துடன் புலிகள் பலவந்தமாக ஆள்களைத் திரட்டுகின்றனர்.

வடக்கில் ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்பவேண்டும் என்பதில் ஜனாதிபதி தெளிவான நிலைப்பாடில் உள்ளார்.

### குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்

யாழ். குடாநாட்டில் சாத்தியமான அளவுக்கு துரிதமாக உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் தமது நோக்கம் குறித்து தமிழ், முஸ்லிம் கட்சித் தலைவர்களுக்கு அவர் அறிவித்துள்ளார். புளொட் தலைவர் த.சித்தார்த்தனின் யோசனைக்குப் பதிலளித்த ஜனாதிபதி, வவுனியா மாவட்டத்திலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் சாத்தியம் குறித்து கவனத்தில் கொள்ளப்படும் எனவும் கூறியுள்ளார்.

வடக்கு மக்கள் தமது பிரதிநிதிகளை சுதந்திரமான முறையில் தெரிவுசெய்வதே தமது விருப்பம் என்றும் அவர் தெரிவித்திருப்பதுடன் குறுகிய தனிப்பட்ட அல்லது கட்சி நிகழ்ச்சித் திட்டங்களை நிராகரித்துவிட்டு தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவம் வடக்கு, கிழக்கு மக்களின் நிலையை மேம்படுத்த அரசுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் அழைப்பு விடுத்திருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியைத் தவிர்க்குமா இந்தியா?

நேர்பியர், மாரச் 30

கௌதம் கம்பீரின் அபார சதத்தாலும், டிராவிட், சச்சின் ஆகியோரின் அரைச் சதத்தாலும் நியூஸிலாந்துக்கு எதிராக நேர்பியரில் நடந்துவரும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 2ஆவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களை எடுத்துள்ளது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இந்திய அணி இன்னும் 62 ஓட்டங்களை எடுக்கவேண்டும். கைவசம் 8 விக்கெட்டுக்கள் உள்ளன.

இந்தியா - நியூஸிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி நேர்பியரில் மக்லீன் பார்க் மைதானத்தில் நடந்துவருகிறது. இதில் முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 619 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தம் செய்தது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆடிய இந்திய அணி 305 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.



இதனால் இந்திய அணி 314 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸை விளையாடியது. ஷேவாக், கம்பீர் ஆகியோர் ஆரம்ப ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர். விக்கெட்டுக்கள் சரிந்து விடக்கூடாது என்பதற்காக பொறுப் புடன் ஆடிய ஷேவாக் வழக்கத்தை விட சற்று ஆக்ரோஷத்தைக் குறைத்துக்கொண்டு ஆடினார். ஆனாலும் அவரால் நிலைத்து நின்று ஆட முடியவில்லை. சுழற்பந்து வீச்சாளர் ஜித்தன் பட்டேலின் பந்துவீச்சில் அவர் எல்.பி.டபிள்யூ முறையில் வெளியேறினார். இதைத் தொடர்ந்து டிராவிட் களமிறங்கினார்.

3ஆவது நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 2ஆவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 47 ஓட்டங்களை எடுத்திருந்தது. கம்பீர் 14 ஓட்டங்களுடனும், டிரா விட் 11 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்றைய 4ஆம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இந்திய அணி நிதானமாகவே விளையாடியது. அபராமாக விளையாடிய டிராவிட் 62 ஓட்டங்களை (220 பந்துகள் - ஒரு சிக்ஸர், 6 பவுண்டரி) எடுத்து நியூஸிலாந்து அணித்தலைவர் விற்றோரியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

பின்னர் வந்த சச்சின் அபராமாக விளையாடி அரைச் சதம் கடந்து 58 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். மறுமுனையில் அபராமாக விளையாடிக்கொண்டிருக்கும் கம்பீர் சதம் கடந்து 102 ஓட்டங்களுடன் களத்தில் இருக்கிறார்.

4ஆம் நாள் ஆட்டநேர முடிவில் இந்தியா 2 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களை எடுத்துள்ளது.

# 'டிஸ்கவரி' ஓடம் பூமிக்குத் திரும்பியது

புளோரிடா, மார்ச் 30

ஏழு வி[illegible]ணவெளி வீரர்களுடன் விண்வெளிக்கு ஏவப்பட்ட அமெரிக்க டிஸ்கவரி ஓடம், பத்திரமாக பூமிக்குத் திரும்பியது. விண்ணில் அமைக்கப்பட்டு[illegible] சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி [illegible]துக்குத் தேவையான சூரிய சக்தி கருவிகளை ஏற்றிக்கொண்டு அமெரிக்காவின் டிஸ்கவரி ஓடம் கடந்த 15 ஆம் திகதி விண்வெளிக்குப் புறப்பட்டது. அதில் 7 விண்வெளி வீரர்களும் சென்றனர்.

2 நாள்களுக்குப் பின்னர் டிஸ்கவரி ஓடம் சர்வதேச விண்வெளி மையத்தை சென்றடைந்தது. வி[illegible]ஞானிகள் விண்வெளி மையத்தில் கருவிகளைப் பொருத்தினார்கள். சில பராமரிப்புப் பணிகளையும் செய்தனர். இதை முடித்துக் கொண்டு பூமிக்கு புறப்பட்டனர்.

டிஸ்கவரி ஓடம் புளோரிடாவிலுள்ள கென்னடி ஆராய்ச்சி மையத்தில் தரை இறங்க ஏற்பாடு செய்யப்பட்டது. பருவநிலை சீர்கெட்டிருந்தமையால், தரை இறங்குவது சிறிது தள்ளி வைக்கப்பட்டது. பின்னர் பத்திரமாக அது தரை இறங்கியது.

## பொது இடங்களில் எச்சில் துப்பினால் நாடு கடத்தப்படுவர்; டுபாய் அறிவிப்பு

டுபாய், மார்ச் 30

பொது இடங்களில் எச்சில் துப்பினால் நாடு கடத்தப்படுவீர்கள் என வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு டுபாய் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. பாகிஸ்தான், இந்தியா ஆகியவை உட்பட ஆசிய நாடுகளிலிருந்து வரும் தொழிலாளர்கள் வெற்றிலையை போட்டு குதப்பும் பழக்கம் கொண்டுள்ளனர்.

இவர்கள் வெற்றிலையை மென்று புளிச், புளிச் என்று கண்ட இடங்களில் துப்பி வைத்துவிடுகின்றனர். இதனால், பொது இடங்கள் பலவற்றில் சிவப்புக் கறைகள் பெருமளவில் தென்படுகின்றன. நகரமே அசிங்கமாகி விடுகிறது. சுகாதார சீர்கேடும் எற்படுகிறது.

இந்நிலையில், இந்தச் செயலை தடுப்பதற்காக டுபாயில் அதிரடித் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்படி பொது இடங்களில் வெற்றிலையை மென்று எச்சில் துப்புபவர்களைப் பிடித்து அவர்களின் சொந்த நாட்டுக்கு உடனடியாக நாடு கடத்திவிட டுபாய் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான அறிவிப்பும் முறைப்படி வெளியிடப்பட்டுள்ளது.

டுபாயில் யாரும் வெற்றிலை சாப்பிடுவதில்லை. ஆசிய நாடுகளிலிருந்து வரும் தொழிலாளர்கள்தான் இந்தப் பழக்கத்தை தென் கிழக்கு ஆசிய பகுதிகளில் பரப்பி விட்டுள் ளனர். பொது இடங்கள் அசிங்கமாவதை தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பரபரப்பாக நடந்த ருவென்ரி 20 போட்டியில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது தென்னாபிரிக்கா

ஜோகனஸ்பர்க், மார்ச்.30

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி பரபரப்பான வெற்றியை ருசித்தது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. அந்த நாட்டு அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றிய அவுஸ்திரேலிய அணி, அடுத்து இரண்டு ருவென்ரி 20 போட்டிகளில் பங்கேற்கிறது. இதில் முதலாவது ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டி ஜோகனஸ்பேர்க் நிவாண்டரர்ஸ் மைதானத்தில் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்கள் சேர்த்தது. அதிகபட்சமாக டேவிட் ஹஸி 88 ஓட்டங்கள் (44 பந்து, 5 பவுண்டரி, 6 சிக்ஸர்) விளாசி கடைசி வரை களத்தில் இருந்தார். அணித்தலைவர் பொண்டிங் (1 ஓட்டம்), உப அணித்தலைவர் மைக்கல் கிளார்க் (2 ஓட்டங்கள்) ஆகியோர் ஏமாற்றினர். தென்னாபிரிக்கா தரப்பில் சுழற்பந்து வீச்சாளர் பீற்றர்ஸன் 3 விக்கெட்டுகளும், பார்னல் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய தென்னாபிரிக்காவுக்கு சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் விழுந்தன. ஒரு கட்டத்தில் 81 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்ததால் நெருக்கடி ஏற்பட்டது. ஆனால் அல்பி மோர்கலும், மார்க் பௌவுச்சரும் அணியை காப்பாற்றினார்கள். அதிரடியாக ஆடிய மோர்கல் 37 ஓட்டங்கள் (19 பந்து, 4 பவுண்டரி, 2 சிக்ஸர்) எடுத்து ஆட்டம் இழந்தார்.

கடைசி ஓவரில் தென்னாபிரிக்காவின் வெற்றிக்கு 7 ஓட்டங்கள் தேவைப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. 20ஆவது ஓவரை வேகப்பந்து வீச்சாளர் பிரெட் கீவ்ஸ் வீசினார். இதில் முதல் 2 பந்துகளையும் பௌவுச்சர் பவுண்டரிக்கு விரட்டி தங்கள் அணியின் வெற்றியை உறுதி செய்தார். தென்னாபிரிக்க அணி 19.2 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. வெற்றிக்கு வழிவகுத்த பௌவுச்சர் 36 ஓட்டங்களுடன் (22 பந்து, 5 பவுண்டரி), அல்பி மோர்கலும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டி தொடங்குவதற்கு முன்பாக இந்திய நடிகையும், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் உரிமையாளர்களில் ஒருவருமான ஷில்பா ஷெட்டி, ஐ.பி.எல். தலைவர் லலித்மோடியுடன் மைதானத்திற்குள் வலம் வந்தார். தென்னாபிரிக்காவில் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாவதையொட்டி, அங்கு ரசிகர்களுக்கு அழைப்பு விடுத்தார் ஷில்பா ஷெட்டி. "ஐ.பி.எல். பொழுதுபோக்கு அம்சம் நிறைந்த அற்புதமான ஒரு கிரிக்கெட் தொடர். இதனை காண அழகான தென்னாபிரிக்க மக்கள் அதிகளவில் திரண்டு வந்து ஆதரவளிக்க வேண்டும்" என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.


## விற்பனைக்குண்டு




சிமெந்து மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**செல்லப்பிள்ளையார்**

வதிரிச் சந்தி, நெல்லியடி.


## 22 ஆம்ஆண்டு நினைவுகளில்

பிறப்பு 05 . 09 1932



இறப்பு 29 . 03 1987

## இ.கதிரவேலு

பாசத்துடன் பக்குவமாய் எமை வளர்த்து
கட்டுப்பாட்டுடன் கண்ணியமும் கற்றுத்தந்து
கடைசிவரை கண்போல காத்த எங்கள் ஐயா
எமைவிட்டு எங்கு சென்றீர்!

தங்கள் ஆத்ம சாந்தி வேண்டி என்றும் பிரார்த்திக்கும்

சந்தை வீதி,
தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.

அமெரிக்க, மியாமி டென்னிஸ் தொடர்

# சானியா, பயஸ் ஜோடிகள் இரண்டாவது சுற்றுக்கு!

மியாமி, மார்ச்.30

அமெரிக்காவின் மியாமியில் நடந்து வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இரட்டையரில் இந்தியாவின் சானியா, பயஸ் ஜோடிகள் 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளன. முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள சொனி எரிக்சன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவின் மியாமி நகரில் நடந்து வருகிறது.

இதில் பெண்கள் ஒற்றையரில் முதல் சுற்றோடு நடையைக் கட்டிய இந்திய வீராங்கனை சானியா மிர்சா, இரட்டையரில் சீனா நாட்டின் சியா ஜங் சுவாங்குடன் ஜோடி சேர்ந்துள்ளார். இவர்கள் இரட்டையர் முதல் சுற்றில் செக்குடியரசின் வெடா பெனசோவா - பார்போரா ஸ்டிரிகோவா இணையை சந்தித்தனர். இதில் கடுமையாக போராடிய சானியா ஜோடி 6-4, 7-5 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

ஆண்கள் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், செக் குடியரசின் லுகாஸ் லோகி இணை 6-2, 6-2 என்ற நேர் செற்றில் சிலி நாட்டைச் சேர்ந்த கோன்சலேஸ் - ஜுவான் மொனாகோ ஜோடியை எளிதாக வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. பயஸ் ஜோடியின் வெற்றிக்கு வெறும் 46 நிமிடங்களே தேவைப்பட்டன.

ஒற்றையரில் உலகின் 2ஆம் நிலை வீரர் [illegible] 6-3, 6-2 என்ற நேர் செற்றில் அமெரிக்க தகுதிநிலை வீரர் கெவின் கிம்மை சாய்த்து 3ஆவது சுற்றுக்குள் நுழைந்தார். மற்றொரு முன்னணி வீரர் சேர்பியாவின் ஜோகோவிச் 6-3, 6-2 என்ற நேர் செற்றில் கனடாவின் பிராங்க் டேன்செவிச்சை வென்றார். பெண்கள் ஒற்றையரில் சேர்பியாவின் அனா இவானோவிச், ரஷியாவின் டினரா சபீனா, குஸ்னெட்சோவா ஆகியோரும் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### சின்னையா சுப்பிரமணியம்

அல்வாய், மாலுசந்தியைப் பிறப்பிடமாகவும் சங்கானை, பிளாக் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சுப்பிரமணியம் நேற்று(29.03.2009)ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் அமரர்களான சின்னையா தம்பதியரின் அன்பு மகனும் அமரர் தங்கவேலாயுதத்தின் அருமைச் சகோதரனும் சந்திரகுமார், ரஜனி, சுகந்தினி(முன்பள்ளி ஆசிரியர், சங்கானை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலைவாணி, பாலகிருஸ்ணன், குணசீலநாதன் ஆகியோரின் அன்பு மாமனும் லவசுயன், லதுசன், நிலக்சிகா, கஜாகரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(30.03.2009) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிளாக் வீதி,
சங்கானை.

தகவல்:
சு.சந்திரகுமார் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# புதுமாத்தளன் கப்பல் மீது குண்டு விழுந்ததை உறுதிப்படுத்துகிறது செஞ்சிலுவைக் குழு

கொழும்பு, மார்ச் 30

முல்லைத்தீவு மாவட்டம், புதுமாத்தளன் பகுதியிலிருந்து காயமடைந்த பொது மக்களை ஏற்றிவரச்சென்ற கப்பல் மீது புதுமாத்தளன் கடலில் நேற்றுமுன்தினம் குண்டு ஒன்று பட்டுள்ளது என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான பேச்சாளர் ஷோபி ரொமான்ஸ் பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பி.பி.ஸி. செய்திச் சேவை தெரிவித்தவை வருமாறு:-

புதுமாத்தளன் கடலில் கப்பல்மீது துப்பாக்கிக் குண்டு பட்டபோதும் எவருக்கும் காயமேற்படவில்லை.

தாக்குதலுக்கிலக்காகிய பின்னரும் கப்பல் 512 காயமடைந்த நிலையிலிருந்த பொதுமக்களை ஏற்றிக்கொண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து அரச கட்டுப்பாட்டிலுள்ள புல்மோட்டைக்கு சில மணிநேரத் தாமதத்தின் பின்னர் வந்து சேர்ந்தது.

இக்கப்பலில் காயமடைந்த நிலையில் கொண்டுவரப்பட்டவர்களில் இரு ஆண்களும் குழந்தையொன்றும் உயிரிழந்துள்ளனர்.

மீட்புப் பணியில் ஈடுபடும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் (ஐ.சி.ஆர்.சியின்) கப்பலொன்று தாக்குதலுக்கு இலக்கானமை இதுவே முதற் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# மூதூர், சேருநுவர பகுதிகளில் இருவர் சுட்டுப் படுகொலை!

கொழும்பு, மார்ச் 30

திருகோணமலை மாவட்டத்தில், மூதூர் மற்றும் சேருநுவரப் பகுதிகளில் நேற்று முன்தினம் இனந் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சேருநுவரப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இனந் தெரியாக நபர்களால் செல்லத்துரை நல்லதம்பி(வயது - 52) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார் எனக் கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபரின் வீட்டிற்கு வந்த ஆயுததாரிகள் அவரை அழைத்து துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் கந்தளாய் வைத்தியசாலையில் நேற்று வைக்கப் பட்டிருந்தது.

அதேவேளை, மூதூர், பாரதிபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இனந் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோத்தில் கந்தையா கோவிந்தன் (வயது 42) என்பவர் உயிரிழந்தார்.

குறித்த நபர் பாரதிபுர வித்தியாலயத்திற்கு அருகில் வைத்தே ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் மூதூர் வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-சி)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனர். மேலும் 11 பேர் வரை படுகாயமடைந்தனர் என படைத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சமரில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் மூவரின் சடலங்களையும் அவர்களின் ஆயுதங்களையும் படையினர் மீட்டனர் என்றும் படைத்தரப்பு கூறியது.

அதேவேளை -

போர் முனைகளில் கடந்த இரண்டு தினங்களில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற கடும் மோதல்களின் பின்னர் பழமாத்தளனுக்கு வடக்கே விடுதலைப் புலிகள் அமைந்திருந்த மண் அரண் பகுதியையும் அதனோடு இணைந்த அகழிப் பகுதியையும் இராணுவத்தினர் கைப்பற்றியிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு கூறியிருக்கிறது.

இந்தச் சண்டையில் 46 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாக அது தெரிவித்துள்ளது.

இதேவேளை, இரணைப்பாலைக்கு வடக்கே உள்ள முன்னரங்கப் பகுதிகளில் விடு தலைப்ப புலிகளுடன் சனியன்று நடந்த கடும் சண்டையில் விடுதலைப் புலிகளுக்கு பலத்த இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் இந்தச் சண்டைகளில் படைத்தரப்புக்கு குறைந்த அளவிலான சேதங்களே ஏற்பட்டிருப்பதாகவும் இராணுவம் தெரிவித்திருக்கிறது.

எனினும் தமது முன்னரங்க மண் அரணைத் தகர்த்து ஊடுருவ முயன்ற இராணுவத்தினர் மீது தாங்கள் நடத்திய தாக்குதல்களில் இராணுவத்தினருக்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகளும் கூறியிருக்கிறார்கள் - என்று பி.பி.ஸி. தெரிவித்துள்ளது. (அ-சி)

## வில்பத்துக்காட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கே எல்லைப்புறத்தில் அமைந்துள்ள ராஜல்கல 18ஆவது கிராமத்தில் சந்தேகத்துக் குரிய இருவர் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் ஓடினர் என்று பொது மக்கள் பொலிஸாருக்கு கொடுத்த தகவலை அடுத்தே இத்தேடுதல் மேற்கொள்ளப் பட்டு.வருகின்றது என தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் நேற்றுத் தெரிவித்தது. (சி)

## இலங்கைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்த தமிழர்கள் என்னைச் சந்தித்து தமிழர்கள் அனுபவித்து வரும் கொடுமைகள் தொடர்பான தங்களுடைய வேதனைகளை தெரிவித்தனர்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை, குறிப்பாக தெற்காசியாவுக்கான கொள்கைகள் மிகவும் மோசமானவை. அண்டை நாடுகளுடனான இந்தியாவின் உறவு நேபாளமாக இருந்தாலும், பங்களாதேஷ் அல்லது இலங்கையாக இருந்தாலும் நம்பிக்கையூட்டுவதாக இல்லை.தெற்காசிய நாடுகளை உள்ளடக்கிய பிராந்தியத்தில் இந்தியா வலுமிக்க பெரிய தலைமையாக உருவாகி இருந்திருக்கலாம். ஆனல் அந்த வாய்ப்பு இப்போது கைநழுவிப் போய்விட்டது -என்று ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ)




## நிபந்தனைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பாக வெளியேற்றும் வகையில் ஐ.நா.பாதுகாப்புச் சபையும், மற்றும் சர்வதேச சமூகமும் தெரிவிக்கும் ஆலோசனையான மனிதாபிமான போர் இடைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள தயாராக இருக்கிறோம்.

நேரத்துக்கு நேரம் மாற்றமடையும்

அரசாங்கத்தினால் என்னவகையான மாதிரிகள் முன்வைக்கப்படும் என்று அமைச்சர் எதுவும் குறிப்பிடாதபோதிலும், களநிலைமைகளுக்கு ஏற்ப அவை நேரத்துக்கு நேரம் மாற்றமடையும் - என்றார்.

மோதல் இடம்பெறும் பகுதியில் சிக்குண்டுள்ள மக்களை பாதுகாப்பாக வெளியேற்றும் வகையில், அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் ஒத்தாசையுடன் ஐ.நா. பாதுகாப்புச் சபை மனிதாபிமான மோதல் இடைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு இலங்கைக்கு அறிவுறுத்தியிருந்ததுடன், புலிகளையும் குற்றம் சாட்டியிருந்தது.

நிபந்தனைகளின் அடிப்படையில்

இதேவேளை, எதிர்காலத்தில் அரசாங்கம் முன்வைக்கும் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே மோதல் இடைநிறுத்தம் பரிசீலிக்கப்படுமே தவிர, வேறுவகையான செல்வாக்கின் அடிப்படையிலோ அன்றேல் அழுத்தத்தின் அடிப்படையிலோ அமையமாட்டாது. மக்கள் பாதுகாப்புப் பிரதேசம் பாதுகாப்பு தரப்பினரை கொல்லும் பிரதேசமாக மாறியுள்ளது.

அதனால், அவர்கள் காயமடைந்து வருகின்றனர். சிவிலியன்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் காரணமாக அவர்கள் திருப்பித் தாக்குவதில்லை.

நாங்கள் எதிரிக்கு எதிராக விமானத் தாக்குதல்கள் மற்றும் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துதல் போன்வற்றை நிறுத்தி விட்டோம். காரணம் சிவிலியன்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதாலேயே அவ்வாறு செய்துள்ளோம். ஆனால், புலிகள் இதனை வாய்பாகக் கொண்டு மக்களுக்கு பின்னால் மறைந்திருந்து படையினரைத் தாக்குகின்றனர். இந்தக் கட்டத்தல் போர் நிறுத்தத்துக்கு அரசாங்கத்துக்கு எவ்வித ஆர்வமும் கிடையாது. சிவிலியன்கள் பாதுகாக்கப்பட்ட பின்னர் புலிகளை படையினர் அழித்தொழிப்பார்கள் - என்றார். (அ-1)

## ஜி.சீ.ஈ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் பூர்த்தியாக்கப்பட்டு கணனியில் இணைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன என்றும் -

அடுத்த மாதம் 8 ஆம் திகதி பாடசாலைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் - பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார். (அ-6)

## மக்களை வெளியேறப் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நாவில் உள்ள பி.ரி.ஐ. செய்தியாளரிடம் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

விடுதலைப்புலிகள், போரில் சிக்குண்டுள்ள தமிழ்ப் பொதுமக்களை வெளியேறுவதற்கு அனுமதித்தால், அவர்களில் ஒரு பகுதியினரையேனும் வெளியேற அனுமதித்தால் கூட -

தற்காலிகப் போர் நிறுத்தம் ஒன்றுக்கான வழிமுறைகளை ஆராய்வதற்கு எமது அரசாங்கம் தயாராக உள்ளது - என்றும் பாலிகக்காரா சொன்னார்.

இதனைப் போர் இடைவெளி என்று கூட நீங்கள் கூறலாம். இதற்கு முன்னரும் எமது அரசாங்கம் 48 மணி நேர போர் நிறுத்தத்தை மேற்கொண்டிருந்தது.

வன்னியில் உள்ள மக்கள் பாதுகாப்பாக வெளியேறும் பொருட்டு 48 மணி நேரப் போர் நிறுத்தம் ஒன்றை ஜனவரி 30 ஆம் திகதி எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

பிரச்சினை என்னவெனில், சிவிலியன்கள் வெளியே செல்வதை விடுதலைப் புலிகள் விரும்பவில்லை. அவர்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தவே அவர்கள் விரும்பினார்கள் - என்று ஐ.நாவில் உள்ள இலங்கையின் நிரந்தரத் தூதுவர் பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு கூறியிருந்தார்.

[தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் எஞ்சியிருக்கும் பிரதேசங்களில் சிக்குண்டுள்ள மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு - பாதுகாப்பான பாதை வசதி செய்து கொடுக்கப்படும்.

அவர்கள் அடுத்த 48 மணி நேரத்துக்குள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுவதற்கு புலிகள் அனுமதிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட அறிக்கை ஒன்றின் மூலம் ஜனவரி 30 ஆம் திகதி அறிவிப்பு ஒன்றை விடுத்திருந்தார்.]

இதேவேளை -

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதி ஆணையாளர் ஜோன் ஹோம்ஸ் -

முல்லைத்தீவில் போரில் சிக்குண்டுள்ள மக்கள் வெளியேறுவதற்கு வகை செய்யும் பொருட்டு, போர் இடைவெளி ஒன்றுக்கு இணங்குமாறு, இலங்கை பாதுகாப்புப் படையினரிடமும் விடுதலைப் புலிகளிடமும் கேட்டிருந்தார்.

இது குறித்து முன்னதாக அவரிடம் கேட்டபோது -

''.... பொதுமக்கள் பாதுகாப்பாகவும், ஒழுங்கான முறையிலும் வெளியேறுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று முதலில் விடுதலைப்புலிகளிடமே கேட்டிருந்தோம். அவர்கள் அவ்வாறு செய்வார்கள் என்று நாம் நம்புகின்றோம். இலங்கை அரசாங்கமும், பொதுமக்களின் உயிரிழப்புக்கள் மற்றும் காயமுறுதலைத் தவிர்ப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் செய்ய வேண்டும் என்பதே எமது அக்கறையாகும்'' என்று கூறினார். (அ)

## நேற்றும் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட 49 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 27 சிறுவர்கள் உட்பட 125 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வலைஞர்மடத்தில் உள்ள மக்கள் வாழ்விடங்களை நோக்கி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உட்பட 18 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளன் பகுதியை நோக்கி நேற்று படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதில் 8 பேர் படுகொலை செய்யப்பட்டனர். அம்பலவன்பொக்கணையில் உள்ள பிள்ளையார்கோவில் பகுதியை நோக்கி நேற்று படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.இதில் 10 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால், இடைக்காடு மற்றும் பச்சைப்புல்மோட்டைப் பகுதிகளை நோக்கி நேற்று படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதில் 13 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அனைத்து பகுதிகளிலும் படையினர் நேற்று நடத்திய ஷெல் தாக்குதல்களில் 125 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டவர்களின் பெயர் விவரம் வருமாறு:

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான புலேந்திரமகாராஜா ராஜஸ்ரீ (வயது 30), புலேந்திரமகாராஜா புவிராசி (வயது 08), புலேந்திரமகாராஜா பைந்தனா (வயது 07), புலேந்திரமகாராஜா வைஸ்ணவி (வயது [illegible]), குலசேகரம் கந்தையா (வயது 65), பாலசுந்தரம் யுவராஜ் (வயது 49), பார்த்தீபன் (வயது 37), தவராசா டினு (வயது 03), தம்பிராசா ஜோன் நிவாஸ் (வயது 26), தியாகசிங்கம் கருணாநிதி (வயது 53), கோவிந்தசாமி (வயது 63), சுதாகரன் சுதர்மன் (வயது 12), மரியதாஸ் கேதீஸ்வரி (வயது 29), அன்ரனி மரியமலர் (வயது 32), காந்தரூபன் ஞானம்மா (வயது 35), குகநேசன் சுசீலா (வயது 45), கனகசபை கந்தசாமி (வயது 45), கனகசபை அழகம்மா (வயது 73), கோவிந்தசாமி இராசம்மா (வயது 53), கறுப்பையா தர்மலிங்கம் (வயது 55), வேலாயுதம் சுதாகர் (வயது 32), தேசிங்கு கருணாநிதி (வயது 53), கவிபாலன் சயந்தன் (வயது 07), கந்தையா புஸ்பராசர் (வயது 46), தவராசா டிலானி (வயுது 03), தவராசா தர்மிளா (வயது 19) ,தவராசா தீபமலர் (வயது 40), தவராசா நிலக்சன் (வயது 12), கணேசலிங்கம் ராஜ்குமார் (வயது 23), கணேசலிங்கம் யமுனாராணி (வயது 48), தர்மலிங்கம் தவராசா (வயது 38), காந்தரூபன் (வயது ஒன்றரை ), காந்தரூபன் லதா (வயது 34), செ.புஸ்பராணி (வயது 48), கந்தன் தம்பையா (வயது 76), மருதன் கேதாரா (வயது 20), சேதுமாதவன் கிருஸ்ணன் (வயது 32), கார்மேகன் காருண்யா (வயது ஒன்றரை), தேவிபாலன் மதுசன் (வயது 5 மாதம்), வே.சின்னத்தம்பி (வயது 35), பா.குணாளன் (வயது 12), விஜிதரன் புவிதா (வயது 08), மதுரவாணன் பார்கவி (வயது 10), ஞானராஜ் மருதன் (வயது 07), கணேசலிங்கம் புவிதன் (வயது 03), கவிராசன் கவிதா (வயது 04), கேவின்ராஜ் பிருந்தன் (வயது 05), கோபாலபிள்ளை பார்கவி (வயது 25), தம்பிப்பிள்ளை மார்க்கண்டு (வயது 30).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.